சிறுகதை மாத இதழ்

# மஞ்சரி

48 ஆசிரியர்: மு.தயாளன் ஆடி 2024 100ரூபா



வாசித்து வாசித்து வாழ்வை வளமாக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்


முு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்



மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்



சு. ஆர்த்திகா


அலெக்ஸ்
பரந்தாமன்


சியாமளா


பிரமி



M.Thayalan



M.Thayalan



M.Thayalan



M.Thayalan



மு.தயாளன்



யோர்ச்
அருளானந்தம்


மு.தயாளன்

நூல்கள் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவேண்டிய
whatsup இலக்கம் : 00447505455811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மால் ஆவதொன்றல்ல பலதுள்ளது

நாளாந்தம் தமிழுலகம் ஒரு அறிஞரை இழந்து கொண்டிருக்கிறது. சமீப காலங்களில் **தெணியான், நந்தினி சேவியர், செ. யோகராசா, தமிழறிஞர் உமாமகேஸ்வரம்பிள்ளை, கவிஞர் அம்பி** என்று பல ஆளுமைகளைத் தவற விட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவற்றுக்கு நம்மால் ஆவதொன்றுமிலை என்று ஒதுங்கி விதி மேல் பாரத்தைப் போட்டுவிட்டு வாழாதிருக்க முடியாது.

இறப்பு என்பது தவிர்க்க முடியாததுதான். இந்த உலகத்தில் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாதது அது ஒன்றுதான். இன்று நவீன விஞ்ஞானம் பிறப்பைத் தாம் நினைத்த திகதியில் பிறக்க வைப்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ளது. ஆனால் இறப்பை அப்படித் தீர்மானிக்க முடியவில்லை.

ஒருவர் இறந்தபின் அவரைத் தமிழறிஞர் என்றும் ஆளுமை என்றும் கூறி நீலிக் கண்ணீர் வடிக்கும் நாம் அவர்கள் உயிருடன் இருக்கும்போது ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

இந்த நிலையிலிருந்து நாம் வெளிவரவேண்டும்.

உயிருடன் இருக்கும்போதே அவர்களின் ஆளுமையை மதிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் சமூகத்திற்கு ஆற்றும் பணிகளுக்கு எம்மாலான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

அவர்களோடு சேர்ந்து நாம் பயணிக்க வேண்டும்.

அவர்களின் இன்ப துன்பங்களில் நாமும் பங்கேற்க வேண்டும். இப்படியான செயற்பாடுகள் அவர்களை எம்மோடு பல காலம் வாழ வைக்கும்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


1 நம்மால் ஆவதொன்றில்லை.....

2 உள்ளடக்கம்

3 சிவப்பு ரோஜா
ஷெல்லிதாசன்

11 ஓடதம்
யூலியன் புஸ்பராஜா

15 நறுவிலி
இரண்டாம் விசுவாமித்திரன்

19 இரத்தம் கேட்கும் அட்டைகள்
சுரேந்திரன் தர்சித் ராகுல்

23 முகாம் பொடியன்
சம்பூர் சமரன்

28 வழி தவறிய வாழ்வு (குறுநாவல்)
அலெக்ஸ் பரந்தாமன்

32 தமிழறிஞர் உமாமகேஸ்வரம்பிள்ளை

36 கலாபக் காதல்
எம். கே. வேணி

44 Scholarship
*M. Thayalan*



**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,+94 773788795

மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

கனக. தீபகாந்தன் +94772121508

வெண்பா புத்தகசாலை. யாழ்ப்பாணம் + 94 212 225 090

பண்டாரவன்னியன் புத்தகசாலை +94772244616

**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரணயா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், வணசிங்க அச்சகத்தினர்,

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்

**அட்டைப்படம்:** மு. தயாளன்

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , T. சௌந்தர் , செயற்கை நுண்ணறிவு

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்** Dr P.இராசையா

**கள நிர்வாகம்** கனக தீபகாந்தன். வி. மைக்கல் கொலின். த. சரண்யா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:**1000Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year
Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307 IBAN : GB11BUKB 20371560389307 SWIFTBIC BUKBGB22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு ரோஜா...!

ஷெல்லிதாசன்



அவளுக்குத் தனது வீட்டுக்கு முன்னால் உள்ள பரந்த நிலப்பரப்பைப் பார்க்கப் பார்க்க மிகவும்மனவேதனையாகவும் அழுகையாகவும் வந்தது.

அவளது அப்பா மூர்த்தி தேடித்தேடி நட்டு வளர்த்த மரங்கள், செடிகள், கொடிகள், விதம் விதமான பூமரங்கள் எல்லாமே இருந்த இடமே தெரியாது அழிந்து கட்டாந்தரையாக இருப்பதைப் பார்த்த மாலதிக்குக் கவலை வராமல் இருக்குமா என்ன?

உயர்ந்து வளர்ந்த பனை, தென்னை, கமுகு மரங்கள் மட்டுமல்ல, வேம்பு, இலுப்பை, புளி, மா. பலா, விளாமரங்கள், மாதுளை, வாழை என வகை வகையான மரங்களை அவளது தந்தை நட்டு வளர்த்திருந்தார். மூர்த்தியை ஒரு பசுமைப் பிரியர் என்று சொன்னாலும் மிகையாகாது.

அன்றொருநாள் நத்தார் அதிகாலை வேளையில் பேரிரைச்சலுடன்வந்து குடிமனைகளுக்குள்ளே புகுந்து அட்டூழியங்களை நிறைவேற்றிப் போன ஆழிப்பேரலையை எண்ணும்போது அவளது உடம்பெல்லாம் கூச்செறியும்.

மாலதியின் வீடோ பெருங்கடலிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவிலிருந்தது. ஆழிப் பேரலை பெருமெடுப்பில் எழுந்து பாய்ந்து வந்து பலமனிதர்களை குடும்பத்துடனேயே விழுங்கிச் சென்றதுடன், அவர்கள் வசித்த வீடுகளையும் உடைத்துத் தள்ளி அட்டகாசம் செய்ததுடன், ஆடு, மாடு, கோழி, நாய்கள் என்ற மிருகங்களைக்கூட விட்டுவைக்கவில்லை.

திடீரென எழுந்த சுனாமி அலையால் திக்குமுக்காடிப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனங்கள் இருந்தவைகளை அள்ளிக்கட்டிக்கொண்டு ஓடினாலும், அவர்கள் ஓடுவதற்கு முன்னமேயே பலரைத் தனது அலைக்கரங்களால் இழுத்து அள்ளியெடுத்து விழுங்கிக்கொண்டது. அப்படி அதன் கரங்களுக்குள் அகப்படாமல் ஓடித் தப்பியவர்களில் மாலதியின் குடும்பமும் ஒன்று என்றே கூறலாம். காரணம், அவர்களது வீடு கடலுக்குச் சற்றுத் தொலைவில் இருந்ததால் தப்பிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனாலும் சுனாமியின் கடைசி அலைக்கரங்களானது இவர்களது வீட்டையும், நிலத்தையும் லேசாக தழுவிச் செல்லமாத்திரம் மறக்கவில்லை.

சுனாமியின் கொடூர உயிர் அழிப்பால் பலரை இழந்த குடும்பங்கள் பல மாதங்களுக்குப்பின் தமது இருப்பிடங்களுக்கு வந்து போரால் சின்னாபின்னப்பட்ட பூமியைப்போல காட்சியளித்த தமது குடியிருப்புக்களைக் கண்டு கண்ணீர் சொரிந்து கவலைப்பட்டுப் பின்பு ஒருநிலைப்பட்டு தமது வாழ்வியலைப் புதுப்பிப்பதில் முனைப்பாக இருந்தனர். ஆனாலும் ஆழிப் பேரலை தொட்டுச் சென்ற நிலங்களில் வளர்ந்திருந்த பயிர் பச்சைகளெல்லாம் வாடிக் கருகி, நிலமெல்லாம் வெறும் கட்டாந்தரைகளாகப் போனதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

மாலதிக்கு அப்போது பத்து வயதுதான் இருக்கும். அவளுக்குப் பிறகு ஒரு தங்கை, ஒரு தம்பி. தனது குறைந்த சம்பளத்தில் சிறப்பாக குடும்பம் நடத்தி வந்தவர் மூர்த்தி. அவரால் நட்டு வளர்க்கப்பட்ட மரங்கள் நன்றிக்கடனாக அவருக்கு பொருளாதாரத்தில் அவ்வப்போது கைகொடுத்தன.

மூர்த்தி பெரிய மரங்களை நட்டு வளர்ப்பதுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. நிலத்தில் ஒருபகுதியில் மரக்கறிச் செய்கையிலும் ஈடுபட்டிருந்தார். அவரது மனைவி, பிள்ளைகள் அனைவரும் அவருக்குப் பக்கத்துணையாக நின்று உழைத்தனர். 'உழைத்தார்க்குக் குறைவில்லை" என்பதுபோல மூர்த்தி அரச உத்தியோகத்தில் சிறுபணியாளராக இருந்தும் பெரிய உத்தியோகத்தர்களைவிட உழைப்பின் மகத்துவத்தால் செல்வாக்குடனேயே திகழ்ந்தார்.

அது மாத்திரமல்ல, தனது வீட்டு முற்றத்தில் ஒரு பூந்தோட்டத்தையே அவர் உருவாக்கியிருந்தார். வகை வகையான நிறத்தில் ரோஜாச் செடிகள். வகைவகையான மல்லிகைக் கொடிகள், செவ்வந்தி, சீனியாஸ், வண்ணவண்ணச் சிதம்பரத்தைகள் அழகழகான குரோட்டன் வகைகள் எனச் சொல்லிக்கொண்டு போகலாம். பொதுவாகச் சொல்லப்போனால் பெரிய பூங்காக்களில் காணமுடியாத மலர்களைக்கூட அவரது பூந்தோட்டத்தில் காணமுடியும்.

மூர்த்தியின் வீடு மொத்தத்தில் அழகும் பசுமையும் நிறைந்தது மாத்திரமல்ல, அணில், கிளி, மைனா போன்ற பலவகை உயிரினங்கள் வந்து கூடியிருந்து காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிகளை உண்டு களித்து ஆனந்த ஒலியெழுப்பும் ஒரு சரணாலயமாகவும் திகழ்ந்தது. இரவிலே அங்கே நிற்கும் இலுப்பை மரங்கள் பூத்துக் குலுங்கும் காலங்களில் அவ்வட்டாரத்திலேயே ஒரு தனி வாசனை வீசும். இலுப்பைப் பழங்கள் பழுத்திருக்கும் வேளைகளில் வெளவால்கள் கிளை கிளையாக வந்து கீச்சிட்டு ஒலியெழுப்பி பழங்களை உண்டு அவற்றின் கொட்டைகளை நாலா திசைகளிலும் கொண்டு சென்று போட்டுவிட்டுப் போகும். மாலதிக்கு அதையெல்லாம் நினைக்கும் பொழுது ஒரு சொர்க்கத்தையே பறிகொடுத்த மாதிரி இருந்தது. எத்தனை இன்பம். எத்தனை மகிழ்ச்சி. வேண்டிய காய் கனிகளை வேண்டிய அளவு ஆசைதீர தாங்களும் உண்டு பிறருக்கும் கொடுத்து குதுாகலித்த காலங்களை எண்ண எண்ண அவளுக்கு ஏக்கம் ஏக்கமாக வந்தது.

வந்த ஆழிப் பேரலை இவர்களது நிலப்பரப்பை மெல்லத் தடவித்தான் சென்றிருந்தாலும் கடைசி அலையில் கடலின் அடியிலே இருந்த கன்னங்கரேலென்ற இரசாயனக் கழிவுகள் பல படிவங்களாக இவர்களின் காணியில் நிரந்தரமாகத் தேங்கி இரசாயன மாற்றத்தையும் ஒருவகையான சவர்த்தன்மையையும் ஏற்படுத்திச் சென்றுவிட்டது. இதனால் மரஞ் செடி கொடிகள் பூமரங்களெல்லாம் படிப்படியாக இறந்து, புல் பூண்டுகளற்ற பாலைவனமாக தனது நிலம் மாறிவிட்டதைக் கண்ட மூர்த்தி நிலைகுலைந்து போனார்.

மனிதர்களைப்போல மரஞ் செடி கொடிகளையும் மனசார நேசித்த மனிதருக்கு உள நோயுடன் உடல்நோயும் தொற்றிக்கொள்ள உடல் நலிந்து அவரது உயிரையே எடுத்துவிட்டன.

இப்போது மாலதிக்கு இருபது வயதாகின்றது. அப்பாவை இழந்தது மாத்திரமல்ல அப்பா பார்த்துப் பாரத்து நட்டு வளர்த்த மரஞ் செடி கொடிகளுடன் அவர் நட்டு உண்டாக்கிய பூந்தோட்டம்கூட, பாழாகி விட்டதானது அவளை ஏக்கத்தின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டது.

அவள் தனது பல்கலைக் கழக கற்கை நெறியாக விவசாய விஞ்ஞானத்தையே தேர்ந்தெடுத்து விண்ணப்பித்திருந்தாள். அப்பாவின் கனவுகளை நிஜமாக்குவதே அவளது முக்கிய நோக்கமாக இருந்தது.

அப்பா ஓர் இயற்கைப் பிரியர் என்பதற்கு மேலாக அழகுப்பிரியரும்கூட. முற்றத்தில் பூத்துக்குலுங்கும் பூக்களிலேயே அவரது காலைக் கண்விழிப்புக் கூட இருக்கும். அப்பாவின் ரசனையோ புதுவிதமானது. பூக்களிலே சிவப்பு ரோஜா என்றாலே ஏனோ அவருக்கு தனிப்பிரியம். அவர் நட்ட பூச்செடிகளில் எந்தப் பூவையாவது பிடுங்க அனுமதித்தாலும் சிவப்பு ரோஜாப் பூவில் மாத்திரம் யாருமே கைவைக்க முடியாது. 'ஏனப்பா உங்களுக்கு எல்லா நிறங்களிலும் சிவப்பு நிறமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கிறது" என ஒருமுறை மாலதி தனது அப்பாவிடம் கேட்டுவைத்தாள். 'அதுவா மகள், மனிதர்களில் ஓடும் இரத்தத்தின் நிறம் சிவப்பு. சாதிக்கொரு நிறம் இனத்துக்கு மதத்திற்கு ஒரு நிறம் கிடையவே கிடையாது. அதுதான்... அது மாத்திரமில்லையடி... நேர்மையான உழைப்பும் செம்மையானது. அதனால் உழைப்பின் நிறமும் சிவப்புத்தானடி" என அவர் சொன்னது அவளுக்கு அன்று அது புரியவில்லை. இன்று பல வருடங்கள் சென்றதும் அப்பாவின் அந்த அரிய தத்துவத்தை அவளால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

உண்மையில் தனது உழைப்பை மாத்திரமே நம்பி செம்மையாக வாழ்ந்த அப்பாவுக்கு செவ்வண்ணம் பிடித்ததற்கு வேறு காரணங்கள் தேவையில்லை.

பல நாட்களாக அப்பாவுக்குப் பிடித்தமான சிவப்பு ரோஜா செடியை உண்டாக்க வேண்டுமென்ற ஆசையுடன், அந்தச் சிவப்பு ரோஜாச் செடியில் அழகாகப் பூக்கும் செவ்வண்ணப் பூவில் அப்பாவின் முகத்தைக்கண்டு ஆசைதீரத் தரிசிக்க வேண்டுமெனவும் துடியாய்துடித்தாள் மாலதி. இருந்துமென்ன, சுனாமி அலையின் இரசாயனக் கழிவுகளால் நிர்மூலமான தங்களது நிலத்தில் அவளது முயற்சிகள் தோல்வியையே தழுவியது.

**************

அன்றைய தினம் மாலதி, தனது தோழி மனோரதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குத் தனது உந்துருளியில் சென்றிருந்தாள். சுனாமியே எட்டிப்பார்க்காத புண்ணிய பூமியில் அவளது வீடு அமைந்திருந்தது. எங்கும் பச்சைப்பசேலென்ற வயல்களும்,வாழை, தென்னை,கமுகு மரங்களுமாகக் காட்சி தந்தது. தோழியின் வீட்டுக்குச் சென்றவளுக்கோ அவள் கண்ட காட்சிகள் தனது சிறு வயதுக் காட்சிகளை நினைவூட்டின. தனது அப்பா உண்டு பண்ணியிருந்த பூந்தோட்டம் போல இருக்காவிட்டாலும் பலவித பூச்செடிகள் மரங்கள் என பூத்துக் குலங்கியிருக்கும் காட்சி அவளது உள்ளத்தை ஈர்த்தது. அது மாத்திரமல்ல அவளது அப்பாவுக்கு விருப்பமான சிவப்பு ரோஜா அங்கு அழகழகாகப் பூத்திருப்பதைக்காண ஆனந்தமாகவும்இருந்தது. தனது வீட்டில்ஒரு பூந்தோட்டத்தை வைக்க முடியாவிட்டாலும் ஒரு சிவப்பு ரோஜாச் செடியையாவது எப்படியாவது உண்டுபண்ணிவிட வேண்டுமென்ற மன ஆதங்கத்தில் ' அடி மனோ, எனக்கு நாலைஞ்சு சிவப்பு ரோஜாத் தடி தருவியே. எங்கடை வீட்டிலை நட்டு வளக்க ஆசையா இருக்குதடி. ஆனால்..."

"என்னடி ஆனால்..."

"அதுவோ...அந்தச் சுனாமி வந்து எங்கடை நிலத்தைக் கழுவி விட்டுச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலையிருந்து ஒரு புல்லுக் கூட முளைக்கமுடியாத நிலமாப் போச்சடி எங்கடை நிலம். நானும் பல தடவையள் ஒரு ரோஜாச் செடியை வைச்சு உண்டுபண்ண முயற்சியெடுத்தும் தோல்விதானடி அதுதான்..."

"நீ பயப்படாதை...உனக்கு நாலைஞ்சு ரோசாத் தடியள் தாறன். நான் சொல்லுறமாதிரி நட்டுப்பார்...நான் அப்பிடித்தான் ரோசாக்களை உண்டு பண்ணினனான். ரோசாச் செடியளை மற்ற செடியளை உண்டுபண்ணிறமாதிரி உண்டுபண்ணேலாது வலு பக்குவம் வேணுமடி. என்ற மனோரதி, நாலைஞ்சு ரோசாத் தடியளை அவளிடம் கொடுத்ததுடன் ஒரு யூரியா பாக் நிறைய தனது வீட்டின் செழிப்பான மண்ணைப் போட்டுக் கொடுத்ததுடன் ' அடி மாலு நான் தந்த மண்ணை ஒரு சாடியிலை முதல் போடு. அதோடை நல்ல காஞ்ச மாட்டெருவை கலந்துவிட்டு சற்று ஈரப்பதனுடன் தடியளை அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடு. தடி முளைக்கும் வரைக்கும் பக்குவமா வெயில் அதிகம் இல்லாத இடத்திலை வைச்சு தடியள் ஆட்டுப்படாமல் பராமரிச்சுப்பார். கட்டாயம் முளைவிடும்"

இதையெல்லாம் உள்வாங்கியபடி வீட்டுக்குச் சென்ற மாலதி, மனோரதி சொன்னமாதிரி பெரிய சாடி ஒன்றை வாங்கிவந்து அவள் அதற்குள்ளே தான் கொண்டுவந்த மண்ணைப்போட்டு நிரப்பினாள். அந்த மண்ணுடன் கலப்பதற்காக பக்கத்து வீட்டில் குடியிருக்கும் பார்வதி அத்தை வீட்டுக்குச் சென்றாள். பார்வதி அத்தை பசுமாடுகள் வளர்த்து பால்கறந்து விற்பவள். அங்கு எரு குவியல் குவியலாக இருக்கும்.

"அத்தை எனக்கு கொஞ்சம் எரு வேணும்...தருவியளே"

"ஏனடி பிள்ளை என்ன செய்யப்போற"

"இல்லை அத்தை நாலைஞ்சு ரோசாத் தடி நட்டுப்பாக்கப்போறன். எரு போட்டால் நல்லா முளைக்குமல்லே அதுதான்..."

"போடி பிள்ளை நான் உப்பிடி எத்தினை தடியள் வைச்சுப் பாத்திட்டன். உந்த சுனாமி இழவு வந்து எங்கடை மண்ணை பாழடிச்சிட்டு போனதிலையிருந்து ஒரு பயிர் பச்சையும் எட்டிப்பாக்குதில்லை...இதுக்குள்ளை நீ வேறை.."

"பாப்பம் அத்தை ..நான் நட்டுப்பாக்கப்போறன்" எனச் சொன்னவள், அத்தை வீட்டிலே ஒரு பாக் நிறைய காய்ந்த எருவை அள்ளியெடுத்து வீடுவந்து சேர்ந்தாள்.

*****************

பார்வதி அத்தைக்கு வயது ஐம்பதுதான் இருக்கும். ஆனால் இன்றும் நதியாவைப் போல என்றும் இளமையாகவே காட்சியளிப்பாள். அதற்குக் காரணம் வேலைக ளில் ஈடுபடும் நேரந்தவிர எந்த நேரமும் குளிச்சுச் சுத்தமாக அழகிய உடையணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிச்சென்று காட்சியளிப்பாள். அவளுடைய கணவனுக்கும் அதுவே பிடித்தமாக இருந்தது. பார்வதி அத்தை எங்காவது கலியாணம் காட்சி, கோயில் திருவிழாக்கள் என்று போனால் அழகிய பட்டுச் சேலையணிந்து உள்ள நகை நட்டுகளையெல்லாம் அம்மன் சிலைக்குச் சாத்திறமாதிரி சாத்தி உதட்டுக்கு உடைக்கேத்த உதட்டுச் சாயம் பூசி, நெற்றியிலே அழகாகக் குங்குமத் திலகமிடுவதுடன் தலையில் உச்சி வகிடெடுத்து வித்தியாசமானவகையில் கொண்டையிட்டு அதற்குக் கறுப்பு நெற்றும் சுற்றிப் போட்டுகொள்ளுவாள். அதுமாத்திரமல்ல அவளது மாற்றமுடியாத பழக்கம் என்னவென்றால் தான் போட்ட கொண்டையின் வலது பக்கத்தில் எப்பவும் அன்றலர்ந்த அழகிய ரோஜாப் பூவை சூடிக் கொள்வதுதான். பொதுவில் ரோஜாப் பூ இல்லையென்றால் அவளது பயணமும் இல்லையென்றே கூறலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விடமுடியாத பழக்கம் உள்ளதுபோல பார்வதி அத்தைக்கு இப்படியொரு பயித்தியம். இவளது இந்தப் பழக்கத்தால் அவளது கணவர்படும் பாடு கொஞ்சநஞ்சமல்ல. தெரிந்த வீடுகளில் ரோஜாப் பூ கிடைக்காவிட்டால் எங்கையாவது திரிந்து விலைக்காவது வாங்கிக் கொடுத்தாலே அந்த அழகுத் தேவதை அடியெடுத்து வெளியே அம்மன் சிலைபோலப் புறப்படும். இப்படியாக ரோஜாப்பூவில் அலாதிப் பிரிமுள்ள அத்தைக்கு மாலதியின் ஆசை மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

********************

அத்தை வீட்டிலிருந்து எருவை எடுத்து வந்த மாலதி, ஏற்கனவே தான் சாடியில் இட்ட மண்ணில் அந்த எருவைக் கலந்து சற்று ஈரப்பதனுக்காக நீரைத் தெளித்து விட்டுத் தனது தோழி தந்த ரோசாத் தடிகளை பக்குவமாக நட்டு, அந்தச் சாடியை தனது நேரடிக் கணகாணிப்பிற்காக தான் படுக்கும் அறையின் வெளிப்பக்கமாக வைத்துக்கொணடாள்.

நாட்களின் நகர்வில் அவள் நட்ட ரோஜாத்தடிகளில் ஒன்று முதன் முதல் முளைவிட்டுச் செக்கச் செவேரென முகங்காட்டிச் சிரித்தது. அதைப்பார்த்த அவளுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை.

'அம்மா...அம்மா...பாத்தியளே நான்நட்ட ரோசாத்தடியை..முளைச்சிருக்குதம்மா. கடவுளே எண்டு ஒண்டாவது நல்லா முளைக்கவேணும்."

'ஓமடி புள்ளை உன்ரை அப்பருக்கு... ரோஜாப் பூ எண்டால்.... அதுவும் சிவப்பு ரோசாப் பூ எண்டால் உயிரடி"

' அதுதான்... அப்பாவின்ரை ஆசைக்காகத்தான் அம்மா... எப்பிடியும் இந்த ரோசா பூக்கிற பூவிலை அப்பாவின்ரை முகத்தை நான் காண வேணுமணை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் மாலதி சொன்னதைக் கேட்ட மாலதியின் தாயாரின் முகத்தில் ஒரு சோகம் ஓடிப் பரந்தது.

ரோசாத் தடி முளைத்ததை பார்வதி அத்தைக்கு சொல்லிவிடவேண்டுமென்ற ஆவலில், "அத்தை பார்வதி அத்தை இஞ்சை ஓடி வாங்கோ. நான் நட்ட ரோசாத்தடியொண்டு முளைச்சிருக்கு..ஓடியந்து பாருங்கோ" என பலமாக கூவியழைத்தாள். அவளது அழைப்பை செவிமடுத்த அத்தை உடுத்த உடுப்போடு ஓடிவந்துபார்த்து " நீயடி உன்ரை அப்பனைப் போல கைராசிக் காரியடி... கட்டாயம் உது நல்லா வளந்து பூக்கும்..இருந்துபார்" என்றாள்

நாட்கள் நகர்ந்தன. ஏனைய தடிகளும் முளைவிட்டு முகங்காட்டின. ஆனாலும் முதன் முதலில் முளைவிட்டெழுந்த தடி கிசுகிசுவென வளர்ந்தது.

அன்று காலைப் பொழுது எழுந்த மாலதி வழக்கம்போல ரோசாச் செடிகளுக்கு தண்ணீர் விட வந்தாள் என்ன ஆச்சரியம். முதல் முளைத்த தடியில் முதல் மொட்டு செக்கச் செவேலென முகங்காட்டிச் சிரித்தது.

" அம்மா ...அம்மா..இஞ்சை ஓடியந்து பாருங்கோம்மா..ரோசாச் செடியிலை மொட்டு வந்திருக்கு..ஓடியந்து பாருங்கோ..அத்தை..அத்தை..நீங்களும் வாங்கோ நான் நட்ட ரோசாச் செடி மொட்டுவைச்சிருக்கு" என ஆனந்தம் தாங்காது அம்மாவையும், அடுத்த வீட்டு பார்வதி அத்தையையும் கூவி அழைத்தாள் அவள். அவர்களும் ஒடோடி வந்து அவளது குதூகலத்தில் கலந்துகொண்டனர். பார்வதி அத்தைக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. வளர்ந்து செக்கச் செவேரென்ற மொட்டு, மெல்ல மெல்லப் பெரிதாகி மணம்பரப்பும் நாளை அவள் மாத்திரமல்ல அவளது தாயும் பார்வதி அத்தையும்கூட ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அன்று இரவு மாலதி அதனைக் கவனிக்கும்போது மலர்ந்தும் மலராத மொட்டாக காட்சியளித்த அது நாளை எப்படியும் மெல்லென விரிந்து செவ்வண்ணமாக காட்சியளிக்கும். அப்படி அழகழகாக காட்சியளிக்கப்போகும் அந்த மலரை தனது சிமாட் போனின் அழகான விதத்தில் படம்பிடித்து தனக்கு ரோசாத் தடிகளை உபயம் செய்து, இப்படியெல்லாம் நடு வெற்றி கிடைக்குமென கூறிய தோழி மனோரதிக்கு அவளது வட்ஸ் அப் இலக்கத்துக்கு அனுப்பி நன்றி கூறவேண்டுமென்ற ஆவலில் மூழ்கியவளாய் இரவு உறக்கத்துக்குப் போனாள் அவள்.

*************

வழமையாக நேரத்துக்கே விழித்துக் கொள்ளும் மாலதி அன்று ஏனோ காலை உறக்கத்தில் வெகுவாக மூழ்கிவிட்டாள். திடீரென அவளது படுக்கையறைக் கதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாக டக்..டக்...கெனத்தட்டப்பட்டது. அப்படித்தட்டப்பட்ட சத்தத்தைக்கேட்டு திடுக்குற்றெழுந்த மாலதி எழுந்து தனது உடைகளைச் சரிசெய்தபடி தனது அறைக் கதவைத் திறந்தாள். அங்கே பார்வதி அத்தை அழகாகப் பட்டுடை தரித்து குங்குமத் திலகமிட்டு உச்சி வகிடெடுத்து அழகிய கொண்டையும் போட்டபடி அம்மன் சிலைபோல அவள் முன்னால் புன்னகை அரும்ப காட்சி தந்தாள்

அப்படிக் காட்சியளித்த பார்வதி அத்தை "அடி பிள்ளை மாலதி...இந்தப் பூவை என்ரை கொண்டையிலை அழகாகக் குத்திவிடடி...என்னவொரு அழகான சிவப்பு ரோசாப் பூ. இப்படியொரு பூவை நான் வாழ்நாளிலேயே காணவில்லையடி.. அப்படியொரு அழகடி" என்று சொன்னபடி தனது கையிலே வைத்திருந்த அந்த சிவப்பு ரோசாப் பூவை மாலதியிடம் நீட்டினாள்.

அதைப் பார்த்த மாலதி, தனது கட்டுக்காவலில் இருந்த தனது ரோசாச் செடியை நோக்கினாள். அங்கே தனது அப்பாவின் ஆசையை நிறைவேற்றக் காத்திருந்த ரோசாப் பூவை காணவில்லை. மாறாக அந்த ரோசாப் பூ பூத்திருந்த செடியின் காம்பிலிருந்து நீர்கசிந்து வழிந்துகொண்டிருந்ததைக் கண்ட மாலதி நிலை குலைந்தவளாய் நின்றாள்.

' அடி பிள்ளை என்னடி யோசிச்சபடி நிக்கிறா.. கலியாண வீட்டுக்குப் போக நேரமாச்சடி..கெதியிலை பூவை குத்திவிடடி" என அத்தை அவசரப்படுத்த, மாலதி அத்தையின் கொண்டையில் அந்த மலரை கண்கலங்கியபடி சூடிவிட்டு நிற்க, பார்வதி அத்தை அம்மன் கோயில் தேராட்டம் மெல்ல மெல்ல அசைந்து சென்றுகொண்டிருந்தாள்.

---

**இரட்டை மேற்கோள் குறி ("..........")**

**ஒருவரின் கூற்றைத் தனித்துக் காட்ட இரட்டை மேற்கோள் குறியை இடவேண்டும்.**

" ஏன் வந்தாய்?" என்றார் சபேசன்.

"கதை எழுதிச் சலித்து விட்டது" என்று கூறினாள்.

" நான் நாளை இறந்தால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ.யூலியன் புஷ்பராஜா.**

அந்த மரண வீட்டிற்கு வந்திருந்த அவனது மனது கனத்து இருந்தது. அந்தப் பெரியவர் இறந்து இரண்டு நாட்கள் கடந்துவிட்டன. அங்கு வந்திருந்தவர்கள் யாவரும், அவனைத் தவிர, இறந்தவரின் உறவினர்கள் என்பதும், அவர்கள் இறந்தவர்க்காய் அல்ல, இருப்பவர்க்காய் வந்தவர்கள் என்பது அவர்களின்

# ஔடதம்



உரையாடல்களில் வெளிப்பட்டது 'தம் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலகை நீத்தவர்களின் இறுதிச் சடங்கு ஒரு மங்கல நிகழ்வு' என்று எங்கோ அவன் வாசித்தது நினைவுக்கு வந்தது.

அவனைப் பொறுத்தமட்டில் அவர் இறக்கவில்லை.

இரு வாரங்களுக்கு முன்னர் அவன் ஒட்டி வந்த வண்டியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவரது வண்டிக்கு முன்னால் சைக்கிள் ஓட்டி வந்த அவர் வீதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடக்க முயன்ற போது இவன் வண்டியின் மீது மோதியபோது அவனால் வாக னத்தை நிறுத்த முடியவில்லை,. அவன் வாகனத்தைத் திருப்ப முயன்ற போதிலும் முடியவில்லை. அவர் கீழே விழுந்து காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவனது வண்டி யின் 'பிறேக் அறுந்திருந்தது பொலிசாருக்குத் தெரிய வந்தது. அடி பட்ட அவர் நல்ல மனிதர் என்பதால், அங்கிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றும் முயற்சியில் மட்டுமே ஈடுபட்டதால் இவனும், வாகனமும் காயப்படாமல் தப்பித்தனர். அவன் இப்போதும் அந்த நேரத்தை நினைந்து உடல் சிலிர்த்தான்.

வைத்தியசாலையில் பொலிசார் அவரைப் பார்த்து, வைத்தியர்களையும் விசாரித்து, அவரை மோதிக் காயப் படுத்தியவனிடமிருந்து அவருக்கு நஷ்ட ஈடு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று கூறிய பொழுது பெரியவர் ,

"இல்லை அந்தப் பையன் மீது எந்தவித தவறுமில்லை பிழை என் மீது தான் ஆகவே நீங்கள் அவரை விசாரிக்க வேண்டாம்!" என்று கூறி, மறுத்து விட்டார். அவன் வீட்டுக்காரர்களும் அவர் விருப்பத்திற்கு மாறாக நடக்க விரும்பவில்லை. பொலிசாருக்குத்தான் சற்றுக் கவலை. அவன் அடுத்த நாள் தனது வழக்கறிஞருடன் பொலிஸ் நிலையம் சென்றபோது அவர்கள் அவனிடம் வாக்குமூலம் எடுக்கும் போது நடந்து கொண்ட விதத்தில் இருந்து புரிந்துகொண்டான்.

அவன் தனியாக இருந்து யோசித்துக் கொண்டிருப்பதை அவதானித்த இறந்தவரின் சகோதரர் ஒருவர் வந்து, அவன் அருகில் உட்கார்ந்தார். அவன் முதுகைத் தடவியவாறே, இறந்துவிட்ட அவரது அண்ணனைப் பற்றிப் பேசத் தொடங்கினார்,

"தம்பி என் அண்ணன் ஒரு வித்தியாச மான ஆள் அவருக்குக் கடவுள் பக்தி மிக இருந்தாலும் அவர் அதிகம் கோவில்களுக்குப் போக மாட்டார் ஆனால் எவருக்காவது துன்பம் வருகின்ற பொழுது, அல்லது தேவை ஏற்படுகிற பொழுது அவர்கள் அவரிடம் கேட்கா விட்டாலும் அவர்களின் தேவையை அறிந்து கொண்டு, தானே முன் வந்து உதவி செய்வார். தான் உனது வாகனத்தில் அடிபட்டு வைத்தியசாலையில் இருக் கும்போது உன்னப் பற்றி விசாரித்து, நீ சம்பளத்திற்கு வண்டியோட்டுவதையும், நீ கலியாணம் முடித்து, அண்மையிற்தான் ஒரு குழந்தைக்குத் தந்தை ஆனாய் என்பதையும் அவர் தெரிந்து கொண்டார்.

கடவுள் நல்லவர்களைத்தான் சோதிப்பாராம், அது போலவே என் அண்ணனையும் அவர் சோதித்து இருக்கிறார், ஏன், உன்னையும்தான். அவருடைய இளைய மகன் 16 வயதாக இருக்கும் பொழுது , அவன் இப்ப உயிரோடிருந்தால் உன் வயதில் உன்னைப்போல் இருப்பான். மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து, பள்ளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்தால் வீட்டுக்குவர இருக்கேக்க, அவனையும் இன்னும் ஒரு பள்ளிக்கூட மாணவனையும் ஆமி பிடித்துக்கொண்டு போய் விட்டது. அவருக்கு தன் மகனைப் பிடித்த கவலையோடு அவனோடு சேர்ந்து பிடிக்கப்பட்ட அவரது நண்பனின் ஒரே ஒரு மகன் காணாமற் போனது குறித்த கவலையும் சேர்ந்து கொண்டது. தனக்குத் தெரிந்தவர்களின் கால், கைகளை எல்லாம் பிடித்து பிடிபட்ட, பிள்ளைகளை மீட்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்தார். ஆனால், அவருடைய மகன் அவருக்கு கிடைக்கவே இல்லை ஆனால் அவருடைய நண்பனின் மகன் தெய்வாதீனமாக விடுதலை செய்யப்பட்டான். அவன் விடுதலையாகி வந்தது, தனது மகன் குறித்த கவலயைப் பாதியாய்க் குறைத்துவிட்டது என்று என்னிடம் சொல்லி நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக் கிறார்.

அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுக்கொண்டிருக்கும்போது அவரைப் பார்க்க வந்த அயல் கிராமத்தவர், ஒருவர்,

"ஏன் ஐயா, நீங்கள் இப்படி இருக்கி றீர்கள் ?போலீசுக்குப் போயிருந்தால் வைத்திய செலவுக் கெண்டாலும் கொஞ்சம் காசு எடுத்து இருக்கலாம் தானே?" என்று நான் கேட்ட பொழுது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்

"தம்பி நான் உழைத்த காசே என்னிடம் இல்லை அந்தப் பையன் சம்பளத் துக்கு வாகனம் ஓட்டுகிறவன் , அது மட்டுமல்ல, இப்பொழுது தான் திருமணம் முடித்து ஒரு குழந்தையும் இருக்கு., நான் அவன் மீதுதான் பிழை என்று சொன்னால் அவனுடைய குடும்பம் எவ்வளவு கஷ்டப்படும் என்று யோசித்துப் பார். அவனைப் பிடித்துக் கொடுத்து அவனுக்கு துன்பம் விளைவித்தால் என்னுடைய நோய் தீர்ந்து விடுமா? இல்லை, என் இந்தக் காயங்கள், மற்றும் நோய் மாறினாலும் என் மனசாட்சி என்னை மிகப் பெரிய நோயாளி ஆக்கிவிடும் இதைப் பற்றிக் கதைக்காமல் விட்டுவிடு என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். நான் இதை இப்ப உனக்குச் சொல்லுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நீ அவரை வந்து பார்த்துவிட்டு போன பிறகு அவர் என்னிடம் சொன்னார் பார் இந்த பையன் இப்ப நிம்மதியில்லாமல் இருக்கிறான். அவனுக்கும் மனச்சாட்சி இருக்கிறது என்னுடைய நிலைமைக்கு அவன் தான் காரணம் என்று எண்ணி மனம் வருந் துவான் எனவே நீ அவனி டம், அவனைக் கண்டாற் சொல்லு. "விபத்து நடந்தால் அதற்கு மோதியவர் மட்டும் காரணம் அல்ல , காரணம் அல்ல மோதப்பட்ட வரும் தான், என்றும் சொல்லு." இதைக் கேட்ட அவனுக்குத் துக்கம் அதிகரித்தது. தொண்டை அடைக்க, அவன் எதுவும் பேசாமலே எழுந்து வெளியே சென்றான்.

அந்த விபத்து நடந்து ஒரு கிழமைக்குப் பின்னர். ஒரு நாள். அவன் தனது குழந்தையின் நோய்க்கு மருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்பதற்கு வைத்தியசாலைக்குச் சென்றிருந்தபொழுது குழந்தையைப் பரிசோதித்த பின்னர் வைத்தியர் இவன் பெயரைக் கேட்க இவன், தனது பெயர் பயஸ் என்று சொன்னதும், அவர், ஆச்சரியத்துடன், "தம்பி என்ன பெயர் சொன்னாய்?" என்று கேட்டார். இவன் திரும்பவும் பெயரைச் சொன்னதும்," அவர் மேசையில் உள்ள பெட்டியில் இருந்து ஒரு துண்டை எடுத்துப் பார்த்து, அவனிடம் காட்டி, " தம்பி,, இந்தப் பெயரை என்னால் மறக்கவே முடியாது" என்று சொல்ல! ஏனென்று பயஸ் கேட்க அவர் சொன்னார்,

"தம்பி ஒரு கிழமைக்கு முன்னால் ஒரு வண்டியுடன் மோதிப் பெரியவர் வருத்தமாக இருந்தபோது அவரிடம் நான்

"ஏன் ஐயா நீங்கள் அந்த வண்டியை ஓட்டிய 'டிரைவர்' மீது நடவடிக்கை எடுக்க மறுக்கிறீர்கள்? என்று கேட்டேன் அதற்கு அவர் சொன்னார்,"ஒன்று அந்தப் பையனில் ஒரு பிழையும் இலல்லை, அதைவிட முக்கியமான ஒன்று ஆமி பிடித்துக் கொண்டு போய்க் காணாமற் போன என்னுடைய சின்ன மகனுடய பெயர் 'பயஸ்" இந்த பையனுக்கும் பயஸ் தான். அந்தப் பெயரைக் கேட்டதும் எனக்கு என் மகன் தான் மனதிலும் கண்ணிலும் தெரிந்தான். அந்தப் பையனில் நான் என் மகனைப் பார்த்தேன் அதனால் அவன் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அவன் நன்றாக இருக்க வேண்டும்!" என்று அவர் கூறியதை அப்படியே சொன்னவர் மருந்துச் சிட்டையை (priscription) அவனிடம் கொடுத்தவாறே,

"இறந்தவரை இருப்பவர்களிற் கண்டு நேசிப்பதுதான் பிரிவுக்குச் சிறந்த மருந்து!" என்று சொல்லி வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார். யோசித்த அவன்,

"நான் இவரை வழியனுப்பமுடியாது!" என்று தீர்மானித்து வீட்டிற்குத் திரும்பினான்.


## பின் நவீனத்துவ சிந்தனை

கலையின் மேதமை, கலையின் தகு பொருத்தம் என்பன பேசப்பட்டு உன்னத இலக்கியங்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதை எதிர்த்து பின் நவீனத்துவ சிந்தனை எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் விசுவாமித்திரன்



# நறுவிலி

நெலம் நெல்லா வெளிச்சிட்டு. வாசல்ல போட்டுக் கோழி ஒண்டு சொண்டால கீறிக் கீறி தீன் பொறக்குது. மரத்தில இருந்து அணில் கடிச்ச மாம்பழம் கீழ உழுந்து கெடக்குது. மண்டபத்தில கெடந்த சாய்மனக் கதிரயில இருந்து சரிபுதீன் வாத்தியாரு வாசலப் பாக்காரு. பொஞ்சாதி இஞ்சி போட்ட தேத்தண்ணிய கொண்டந்து குடுத்தா மோதின் பாங்கு பறிஞ்ச ஒடன நித்திர உட்டு எழும்பி படுக்கய ஒழுங்கு பண்ணி வெச்சிட்டு தொழுது முடிப்பாரு. வெட்டல வந்து மண்ட பத்தில கெடக்கிற கதிரயில அமந்து தேத்தண்ணியக் குடிச்சிட்டு எதுண்டான வாசிப்பாரு.

அப்பிடித்தான் ப்ப வந்து கதிரயில இருக்காரு. அவர்ர கைல ஒரு பொத்தகம். அதுல கொஞ்சத்த வாசிச்சி முடிச்ச பொறகுதான் அண்டய வேல வெட்டி தோங்கும். முப்பது நாப்பது வரிசமா ப்படித்தான் அவர்ர காலம் போகுது தேத்தண்ணிய குடிக்காரு

சரிபுதீன் வாத்தியாரு பென்சன் சம்பளம் எடுக்கத் தோங்கி பதினஞ்சி வரிசம். புள்ள குட்டிகள் கலியாணம் முடிச்சி சந்தோசமா இரிக்காக. அவரு பொஞ்சாதியோட எளய மகள்ர ஊட்டுல இரிக்காரு.

கத, கட்டுர, கவித ண்டு எழுதின தாலயும் வாத்தி வேல பாத்ததாலயும் அவருக்கு ஊர்ல படிச்சாள் ண்டு பேரு. இங்கிலீசி சிங்களம் எல்லாம் தெரிஞ்ச மனிசன். கவுண்மெந்துக்கிட்ட என்னயும் கேட்டு எழுதணும் ங்கிற ஆக்கள் அவருக் கிட்ட வந்து கடிதம் எழுதிக்கிட்டு போவாக. அதிலயும் முக்கியமா புதிசா கவித கத எழுதுற ஆக்கள் அவருக்கிட்டக் குடுத்து திருத்தி எழுதி வாங்கிட்டுப் போவாக . செல ஆக்கள்ர கட்டுர அவர் சென்னதுக்காக பேப்பர்கள்ல வந்தும் இரிக்கி

அவரத் தேடித்தான் செரக்காப் போடியார்ர பேரன் புகாரி பொத்தகம் மாதிரி ஒண்ட எடுத்துக்கிட்டு வாறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் இருக்கீங்களா? கேத்தடிய புகாரி நிண்டு கூப்பிர்ர சத்தம் வாத்தியாருக்குக் கேக்குது. உள்ளுக்கு வாங்க

எல்லாரும் தள்ளித் தொறக்கிற மாதிரி எணக்கின கறுத்த பொயிண்டு அடிச்ச இரும்புக் கேத்து. புகாரி கேத்தத் தொறந்துக்கிட்டு உள்ள வாறாரு.

அந்த பொடியன் புகாரி கவுண் மெந்தில கௌாக்கு வேல செய்ர. எளம் வயசி. கவித எழுதுறதால கவிஞன் புகாரி ண்டும் ஆக்கள் அவனச் செல்ர. கூட்டம் குஞ்சடி ஒண்டயும் உட மாட்டான். நெல்ல ஊக்கமான பொடியன். அவன் எழுதுற பொத்தகத்துக்கு அணிந்துர கேட்டுத்தான் வாத்தியாருக்கிட்ட வந்திரிக்கான். வெறாந்தயில வெள்ளச் சாறனும் பெனியனுமா நெறஞ்ச மனுசனா சிரிச்ச மொகத்தோட சரிபுதீன் வாத்தியாரு சாய்மனக் கதிரயில இரிக்காரு.

வந்தவர முன்னுக்குக் கெடந்த கதிரயில இரிக்கச் செல்றாரு. எழுபத்தஞ்சி வயசும் இருபத்தஞ்சி வயசும் கதைக்கத் தோங்கினாக நேத்து வாற ண்டு சென்ன. வெரல்ல.எங்க போன?

நேத்து டவுண்ல ஒரு கூட்டம் நடந்த. அதில வெளியூர்ல இருந்து ஒரு பெரிய ஆள் வந்து விபுலாநந்த அடிகளப் பத்திப் பேசினாரு. அவரப்பத்தி புதுப்புது வெசயமெல்லாம் சென்னாரு. சுவாமிகள் பழய காலத்து பெரும் பெரும்

பொத்தகங்களயெல்லாம் படிச்சிப் பாத்து அதில இரிக்கிற மாதிரி யாழ் ங்கிற இசைக்கருவிய தானே செஞ்சயாம் ண்டெல்லாம் சென்னாரு. நெல்லாப் பேசினாரு. அங்க போனதாலதான் நேத்து ஞ்ச வெரக் கெடைக்கல்ல.

புகாரிர கைல இருந்த பொத்தகத்த வாங்கி எடுத்தாரு. ஒரு கெழமைக்குப் பொறகு வாங்க எழுதி வெய்க்கிறன்

புகாரி போக எழும்பினான்.

இரிங்க தேத்தண்ணி வெரும். குடிச்சிட்டுப் போகலாம்.

சீனி கொறச்சிப் போர்ர பெரச்சின இரிக்கா ண்டு கேட்டாரு. பெரிசா இல்லெண்டு புகாரி வெட சென்னான். தேத்தண்ணி வாறதுக்கெடையில கொஞ்சம் பேசிக்கிட்டு இருந்தாக

நீங்க வாற வழில ஒரு ஸ்கூள் இரிக்கிலா? நான் அந்த ஸ்கூள்ள தான் படிச்ச. அந்த ஸ்கூளுக்குப் பக்கத்தில அந்தக் காலத்தில ஒரு வெட்ட வளவு கெடந்த. அந்த வளவுக்க ஒரு பெரிய மரம். அதுர பேரு நறுவிலி மரம். கேள்விப்பட்டிருக்கீங்களா?

கேள்விப்பட்டிருக்கன். ஆனா அப்பிடி ஒரு மரத்த நான் பாக்கல்ல.

பொடியன் பதில் சொன்னான்.

சரிபுதீன் பேசினாரு.

நம்முட ஊர்ல ஏழெட்டு எடத்தில நறுவிலி மரம் நிண்ட. ப்ப ஒரு எடத்திலயும் அந்த மரம் ல்ல. நம்முட ஊர்ல மட்டுமில்ல.எங்கயும் ப்ப அந்த மரத்த காண்ற கஷ்டம். ஆருத்துப் பொயித்து.நறுவிலி மரம் அழிஞ்சி போற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியா தெரியிது.

அந்த மரம் இருபது இருபத்தஞ்சி அடி வளந்த பொறகு கிளயா பிரிஞ்சி முறுகி மரமா வளரும். அடிமரம் தென்ன மரத்திர சுத்தளவு இரிக்கும்.

எலய பாக்கிறதுக்கு வடிவா இரிக்கும். உள்ளங்கை மாதிரி நீளப்பாடு. கடும் பச்சக் கலரு. கொத்துக் கொத்தா காய்க்கும். சித்திர வைகாசி மாசம் வந்தா குயில் வந்து கூவும் ண்டு படிச்சிரிப்பீங்க. குயில் நறுவிலி மரத்தக் கண்டா அதில இருந்து தான் கூவும். நறுவிலி மரம் ல்லாட்டித்தான் வேற மரத்துக்குப் போகும்

நாங்க ஸ்கூள் கலஞ்சா அந்த வெட்ட வளவுக்க வந்து பொல்லால கல்லால எறிஞ்சி நறுவிலிப் பழத்த உழுத்தாட்டி அதுகளப் பொறக்கித் திங்குற.

நறுவிலிப் பழம் லேசான தவுட்டு நெறம். பெரு வெரலயும் பக்கத்து வெரலயும் சேத்து நறுவிலிப் பழத்த பிதுக்கினா பழம் வெதயோட வெட்டல வெரும் . செரியான பிசின். கை கால் உடுப்பு முழுக்க ஒட்டிப் புடிக்கிம். பாக்கிறதுக்கு மூக்குச்சளி மாதிரி இரிக்கும். மூக்குச் சளிப்பழம் ண்டு செல ஆக்கள் அதச் செல்ர. எங்கிட வகுப்புல ஒரு பொடியண்ட மூக்கால எந்நேரமும் சளி வழிஞ்சிக்கிட்டு இரிக்கும். அவன நாங்க நறுவிலி ண்டு பட்டம் செல்லி கூப்பிர்ர

பொஞ்சாதி தேத்தண்ணி கொண்டந்து குடுத்தா

வாத்தியாரு அவனுக்கிட்ட ஒரு கேள்வி கேட்டாரு. ஒங்குட வாப்பாட தம்பி மொறயான ஒரு ஆள் ஓடாவித் தொழில் செஞ்சலா ? நீங்க அவகிட ஊட்ட போற வாறயா?

இருந்திருந்து போட்டு போற. அவரு சாச்சா காலஞ்செண்டு ஏழெட்டு வரிசம்

.

போனா கேட்டுப் பாருங்க. அங்க நக நட்டு வெய்க்கிற சின்னொரு பொட்டி இரிக்கும். அது ஒங்கு சாச்சாதான் செஞ்ச.

அவரு எனைக்கிம் செரியா அதே மாதிரி ஒரு நகப் பொட்டி செஞ்சி தந்த . எனக்கிட்ட ப்ப அது ல்ல. ப்ப அந்தப் பொட்டி மூத்த மகளுக்கிட்ட இரிக்கி. அந்தப் பொட்டிய ஒங்கு சாச்சா செஞ்சி தரக் கொள்ள பொம்புளகள் தல வாந்து பேன் எடுக்கிற சீப்பும் ஒண்டு செஞ்சி தந்த ப்ப அதெல்லாம் இரிக்க மாட்டா.

அந்த நகப் பொட்டியும் சீப்புகளும் செஞ்சது நறுவிலி மரத்தால. செரியா தேக்கு மரம் மாதிரி இரிக்கும். பாக்கிற ஆக்கள் அது தேக்கு மரத்தால செஞ்ச ண்டு தான் நெனப்பாக . நறுவிலிமரப் பலகய தேக்கு மரம் ண்டு செல்லி வித்து சண்ட புடிச்ச சரித்திரமும் இரிக்கி . இந்த மரத்திர துளிர் எலய எடுத்து சாறு புழிஞ்சி மூல நோய்க்கு மருந்து செய்ர ண்டு பிந்தின காலத்தில நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டிருக்கன்.

அது சரி நேத்து கூட்டத்தில வேற என்ன வெசயம் சென்னாரு. நெல்ல சனம் வந்திச்சா? விபுலாநந்தரு எழுதின யாழ் நூல இங்கிலீசில எழுதி இருந்தா அவருக்கு நோபல் பரிசு கெடச்சிரிக்கும் ண்டும் பேசினாரு . வங்காள தேசத்து மகாகவி ரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசு கெடச்ச அவரு எழுதின கீதாஞ்சலி காவியத்த இங்கிலீசில எழுதினதாலதான் ண்ட ஒரு படம் வாத்தியார்ர மனசில வந்து போச்சி.

பொடியன் கூட்டத்தில பேசின வெசயத்த தொடந்து சென்னான்

விபுலாநந்த அடிகள் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களோட நெல்ல மொறயில பழகினவரு. வேறுபாடு பாக்காத பெரிய மனிசன், அவர தேசிய வீரனா ஆக்கிறதுக்கு நம்முட பெரதேசத்து ஆக்கள் மெனக்கெடனும் ண்டு கொறப்பட்டுச் செல்ர மாதிரி பேசினாரு. பொறகு என்ன நடந்தெண்டு தெரியா. நான் வந்திட்டன்

சரிபுதீன் சொன்னாரு

விபுலாந்த அடிகள் பழய பழய பொத்தகமெல்லாம் பாத்து அதில யாழ் இசைக்கருவி எப்பிடி இருந்த ண்டத கண்டு புடிச்சி அதே மாதிரி இசைக்கருவி ஒண்ட விபுலாநந்தரு செஞ்சது மெய்தான்.

விபுலாநந்தரு மரப் பட்டய எடுத்து தண்ணில எளகப் போட்டு பொறகு அத எடுத்து பொல்லால அடிச்சி தொவச்சி தும்பு தும்பா ஆக்கி கவுறு மாதிரி திரிச்சி எடுத்து துண்டு துணி ல்லாம நெல்லா நரம்பு மாதிரி செஞ்சி இசைக்கருவில பொணச்சித்தான் அந்த இசைக்கருவிய செஞ்சாரு. அவரு செஞ்ச இசைக்கருவில இருந்த நரம்பு நறுவிலி மரப்பட்டயால செஞ்சது. நறுவிலிப் பட்டயால நரம்பு செஞ்ச வெசயம் பல பேருக்குத் தெரியா


வாத்தியாரு செல்லி முடிச்சாரு

நறுவிலி மரத்த மனசில செமந்துகிட்டு அவன் வெளியெறங்கிப் பொய்த்துக் கிட்டிருக்கான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம் கேட்கும் அட்டைகள்



**சுரேந்திரன் தர்சித் ராகுல்**

அந்தச் சிவப்பு அறையில் அவள் கட்டி வைக்கப்பட்டிருந்தாள். கூடவே இன்னும் இரண்டு மூன்று பொட்டு வைத்த பெண்கள் மயங்கிய நிலையில் தலை விரி கோலத்தில் ஆடைகள் களையப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். செத்துக் கிடந்த அப்பெண்களின் சூடுவைக்கப்பட்டு தீய்ந்து கிடந்த முதுகில் பிளேட் கீறல்களும் ரப்பர் ஸ்டாம்ப் முத்திரைகளும் காணக் கிடைத்தன. அதேநேரம் கட்டி வைக்கப்பட்டிருந்தவள் கத்தவோ கதறவோ இயலாதவாறு அவளின் வாய் கட்டப்பட்டிருந்தது. ஆனாலும் அவளுக்கு நடக்கப்போவது என்னவென்று தெரிந்துவிட ஏற்பட்ட எல்லை மீறிய அச்சத்தால் மயங்கிப் போனாள்.

மயக்கமுற்ற போதும் அவள் மனம் சிந்தித்தது. கடந்த காலத்தை அசை போட ஆரம்பித்தது. அவள் கடந்து வந்த பாதை ஒன்றும் அத்தனை இலகுவான ஒன்றல்ல. பஞ்சு மெத்தையில் கால் வைத்து நடந்து வரும் நிலையில் அவள் எப்போதும் இருந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால் அவளது இலவம் பிஞ்சு பாதங்கள் காணாத கல்லும் முள்ளும் இல்லை எனலாம்.

அவள் பிறந்தது மத்தியில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்... நாளை தெரியாத மக்கள் கூட்டம் மொத்தமும் வாழும் அந்த மலையகத்தில் எல்லோரையும் போல் முதுகுத் தண்டு ஓடிய தேயிலைக்கூடை சுமந்த ஒரு மாதரசியின் வயிற்றில் பிள்ளையாய்ப் பிறந்தாள். அப்பழுக்கு ஏதுமில்லா அந்தத் தோட்டத்திலேயே வளர்ந்தாள். இவளைப் பெற்றவளைச் சிறுத்தை தூக்கிக் கொண்டு போக..... சிங்க சாதி பெண் ஒருத்தி சித்தி ஆகிப் போனாள். அவள் சித்தி ஆன நாள் தொட்டு இவள் சிதிலமாகிப் போனாள். குடிகார அப்பன் .... இல்லாத அம்மா ...... பொல்லாத சித்தி.......இது எல்லாம் கடந்து எப்படியோ பதினாறு வயதை தாண்டியிருந்தாள் அவள். எல்லாம் சொல்லி விட்டு அவள் பெயரைச் சொல்ல மறந்துவிட்டேன். அவள் பெயர் இளவரசி....... சிரிக்க வேண்டாம். சித்திகள் வாழும் வீடுகளில் கண்டிப்பாக இளவரசிகள் இருப்பார்கள்...... உங்களுக்கு தெரியாததா

என்ன...... அந்த புண்ணியவதி சித்திக்கு இளவரசியைக் கொஞ்சமும் பிடிக்காது. காரணம் சொல்லித் தெரியும் அளவுக்கு ஒன்றும் புதியது இல்லை என்பதால் அதைக் கடந்து செல்வோம். இப்போது விசயம் என்னவென்றால் இளவரசிக்கு பதினாறு முடிந்து பதினேழு தொடங்கி விட்டதால் அவளை எங்காவது கொண்டு போய் வீட்டு வேலைக்கு விடும்படி நச்சரிக்கத் தொடங்கியிருந்தாள் அந்த சித்திக்காரி. தெரியாத்தனமாய் இரண்டாவதாய் ஒன்றை கட்டிய பாவத்துக்கு ஊமையாகிப் போயிருந்தான் அந்த வைப்பாட்டிதாசன்.

"இத பாருமா ப்ரோக்கரு சொல்ற மாதிரி நடந்துக்கணும் சரியா அங்க டவுனுல எல்லாரும் படிச்சவங்களா இருப்பாங்க பாத்து பழகனும். அப்றோம், ஒரு ரெண்டு மூணு வருசம்தான் அதுக்கப்புறோம் நீ இங்கயே வந்துரலாம்"

தகப்பன் காரன் தான் வாங்கிய கடனுக்கு ஈடாய் தான் பெற்ற மகளை கொத்தடிமை போல் விற்பது எல்லாம் எங்கள் பகுதிகளில் மிக இயல்பாய் நடக்கும். லயத்தை விட்டால் வீடு. வீட்டை விட்டால் லயம்.

இது மட்டுமே தெரிந்த அந்த ...... பதினெட்டு வயது தாண்டாத வேலைக்காரி என்பதா..... வேலைக்கு செல்லும் சிறுமி என்பதா...... எதற்கு வம்பு அதுதான் பெயர் இருக்கிறதே இளவரசி என்றே சொல்லி விடுவோம். அந்த இளவரசி பேருந்து வழியே மேடுகளைக் கடந்து பள்ளங்களை நோக்கி சென்று கொண்டிருந்தாள்.

இப்போது அந்த பேருந்து தலை நகரை அண்மித்திருந்தது. அதாவது படித்தவர்களும் பெரியவர்களும் எனத் தங்களைத் தாங்களே சொல்லிக் கொள்வோர் வாழும் கொழும்பு நகரை வந்தடைந்திருந்தது. இளவரசி இதுவரை தன் வாழ்நாளில் தான் காணாத அதிசயம் எல்லாம் கண்டு கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது,

"ஏய் இங்கபாரு இப்ப நீ போறியே அங்க பெரிய பெரிய ஐயா மாறுங்க எல்லாம் இருப்பாங்க! அவங்க சொல்றபடி கேட்டு நடந்துக்கணும்........ பிரச்சன பண்ணாம இருக்கனும் சரியா"

கமிசன் பணத்துக்காய் அடுத்தவன் வீட்டு பிள்ளைகள் வாழ்வில் மண் அள்ளி போட்டு தன் வயிறு வளர்த்திடும் ப்ரோக்கர் என்கிற அந்த உத்தம நாய் தன் பங்குக்கு எதோ குரைத்தது. பேருந்தை விட்டு இறங்கியதும் சிறிது நேர ஆட்டோ பயணம் அதற்கு பின்னர் பொடிநடையாக ஒரு நூறு மீட்டர் நடைக்குப் பின் அவள் அந்த வீட்டை வந்தடைந்திருந்தாள். அதை வெறுமனே வீடு என்று சொல்லிவிட்டு நகர்ந்து விட முடியாது. மூன்று அடுக்களை கொண்டு கிட்டத்தட்ட அது ஒரு மாளிகையை போல் இருந்தது. இளவரசி தன் தலையை தொண்ணூறு பாகைக்கு மேலுயர்த்தி அந்த மாளிகையின் மூன்றாவது மாடியைப் பார்க்கிறாள்.

அங்கே நின்றுகொண்டிருந்த அந்த வெள்ளை சாரம் அணிந்த கிழ உருவம் அவளைப் பார்த்து ஏதோ சொல்வது போல் இருந்தது. அது என்னவென்று புரியாதது போல் இருந்திட அவள் என்ன என்று கேட்டாள். மேல் மாடியில் இருந்து ஒரு சாவிக் கொத்து கீழே வீசப்பட்டது. அதை அலேக்காக பிடித்த அந்த தரகன் முன் வாயிலை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். அவனைத் தொடர்ந்து இளவரசியும் அந்த வீட்டினுள் நுழைந்தாள். பிறகு இருவரையும் மேலே வரும்படி அந்த வெள்ளை கை அசைத்ததும் இருவரும் படிகள் வழியே ஏறி மூன்றாம் மாடியை அடைந்திருந்தார்கள். அதன் பின்னர் அந்த தரகன் கையில் ஐந்தாறு பச்சைமயில்கள் திணிக்கப்படச் சாவிக்கொத்தும் இளவரசியும் கைமாற்றம் செய்யப்பட்டன.

முதல் நாள் வேலை ஏதும் பெரிதாக இருக்கவில்லை. அவளுக்கு என்று ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த வீட்டில் ஏற்கனவே ஒன்றுக்கு இரண்டு வேலைக்காரிகள் இருந்தார்கள். சமையல் செய்வது வீட்டை பெருக்குவது தொடங்கி எல்லாவற்றையும் அவர்களே செய்து விடுகிறார்கள். அப்படி என்றால் தான் எதற்கு என்ற கேள்வி மட்டும் தான் இளவரசியின் மனதை குடைந்துக் கொண்டிருந்தது. முதல் நாள் எந்த வேலையும் இருக்கவில்லை.... இரண்டாம் நாளும் மூன்றாம் நாளும் கூட எந்த வேலைகளும் இல்லாமலேயே நகர்ந்துவிட ஒரு கட்டத்தில் சாகும் வரை இங்கேயே இருந்து விடலாம் போலிருக்கிறதே என்றெல்லாம் கூட யோசித்தாள் இளவரசி. அவளுக்கு அந்த வீட்டில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எந்த குறையுமிருக்கவில்லை ஆனால் அந்த வீட்டில் நிலவும் அந்த மயான அமைதி மட்டுமே அவளுக்கு ஒரே குறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. ஆனால் அந்த அமைதியா இல்லை தன் சித்தியா என்று ஒரு கணம் யோசித்தவளுக்கு..... அதற்கு இதுவே பரவாயில்லை என்று தோன்றிற்று. நான்காம் நாள் விடிந்தது..... காலையிலேயே சுடுதண்ணீர் ஊற்றி எழுப்பப்பட்டாள் இளவரசி. நல்லவேளை போர்வையை போர்த்தியிருந்தாள் இல்லையென்றால் வெந்துப் போயிருப்பாள். அவள் சீவிச் சிங்காரிக்கப்பட்டாள்... தன் வாழ்நாளில் கண்டிராத வாசனைத் திரவியங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டாள்.

அதே நேரம் வெள்ளை வண்ண மகிழூந்தொன்று அந்த வீட்டு வாசலில் வந்து நின்றது. அதற்குள் ஏற்கனவே இவளைப் போல் பலர் இருந்தார்கள். இவளை ஏற்றிக் கொண்டதும் மகிழூந்து புறப்பட தொடங்கியது. அந்த வாகனம் சிறகுகள் கொண்டிருந்ததோ என்னவோ அத்தனை வேகமாய் பறக்கத் தொடங்கியது.

கண்மூடி கண்திறக்கும் போது அது ஓர் பழைய கட்டிடத்தை வந்தடைந்திருந்தது. வாகனத்துக்குள் இருந்த அத்தனை பேரும் கீழே இறக்கப்பட்டு அந்த ஒட்டடை பிடித்த பழைய கட்டிடத்துக்குள் கூட்டிச் செல்லப்பட்டார்கள். அனைவரது கண்களும் கைகளும் கட்டப்படுகிறது......அதன் பின்னர் அந்த வெள்ளை நிற சாரத்தை அணிந்த அந்த கிழ உருவம் சிவப்பு அறையினுள் நுழைகிறது.

அந்த கிழத்தின் முகத்தில் உணர்சிகள் ஏதும் இல்லை.....அதற்கு அப்படியே நேர் எதிராக கட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களோ கதறத் தொடங்கினார்கள். ஆனால் அதிக நேரத்திற்கு எல்லாம் இல்லை......உடைந்துப் போய்க் கிடந்த மேசைகளில் இருந்த மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனும் அரச இலட்சினை பொறித்த இறப்பர் முத்திரைகள் எல்லாம் அந்த அப்பாவிப் பெண்களின் நெற்றியில் குத்தப் படுகிறது.....


அவர்கள் துகிலுரிக்கப்படுகிறார்கள். அத்தனை பேரும் திரௌபதி ஆகிப் போகிறார்கள்....... பாழாய்ப் போன உலகில் கண்ணன்களுக்கு கொஞ்சம் பஞ்சம் ஆதலால் மானம் காப்பாற்றும் படலத்துக்கு எல்லாம் வாய்ப்பே இல்லை. அந்தப் பெண்கள் எல்லோரும் காட்டுத்தனமாய் கதறுகிறார்கள் .ஆனாலும் அந்தக் கதறல்கள் எழுந்த வேகத்திலேயே வீச்சம் குறைந்து குரல்கள் எல்லாம் முடங்கிப் போயின......அதே நேரத்தில் இளவரசி யாரைச் சொல்லி அழுவது என சிந்தித்துக்கொண்டிருந்தாள். ஒன்றுக்கும் ஆகாத அப்பனைச்சொல்லியா.... நிம்மதியாய் போய்ச் சேர்ந்து விட்ட தாயைச்சொல்லியா...... இல்லை... அந்த சித்திக்காரியை சொல்லியா....தேவையே இல்லை........ தேவையில்லாத இந்த குழப்பங்கள் என்பதாய் முடிவெடுத்தாள். மூச்சை அடக்கி தானாய் அடங்கிப் போனாள்..... அத்தோடு எல்லாமும் அடங்கிப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம் பொடியன்

**சம்பூர் சமரன்**



பாடசாலை கேட்போர் கூடம் வழமையை விட சற்று அதிகமாக இரைச்சலாக இருந்தது. இறுதி தவணைப் பரீட்சைகள் முடிந்து விடுமுறை விடுவதற்கு முன்னர் மாணவர் தேர்ச்சி அறிக்கைகளை வழங்கி கௌரவிப் பதற்கான ஒன்றுகூடல் ஏற்பாடாகி இருந்தது. அதனால் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவர்கள் உற்சாகமாகவும் முதன்மை நிலைக்கு போட்டி போட்டு படித்து அதனை தவறவிட்டவர்கள் சோர்வாகவும் இன்று விடுமுறை ஆரம்பமாகிறது என்று கொண்டாடும் பல மாணவர்கள் மிகுந்த சந்தோசத்துடனும் உற்சாகத்துடனும் இருந்தனர்.

ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் அதற்குப் பொறுப்பான மாணவ தலை வர்களால் வரிசையாக அழைத்து வரப்பட்டு கேட்போர் கூடத்தில் உள்நுழைந்தாரகள். கேட்போர் கூடம் கூச்சலும் கும்மாளமும் நிறைந்து வாராந்த சந்தைகளை யும் விஞ்சி விடும் அளவிற்கு சத்தம் அதிகம் காணப் பட்டது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கும் பாடசாலை அது. அனைவரும் ஒரே இடத்தில் குழுமினால் சத்தம் என்ன குறைவாகவா? இருக்கும். இருந்தாலும் மாணவ தலைவர்கள் அமைதியை நிலைநாட்ட பகிரத பிரயத்தனம் செய்தார்கள். ஆசி ரியர்கள் ஒருவர் இருவராக வந்து மேடையில் ஏற்கனவே போடப் பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டு தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். இடையி டையே மேடையின் கீழே உள்ள மாணவர்களையும் நோட்டம் விட்டார்கள். இன்னும் சிலர் தாங்கள் கொண்டு வந்த முத னிலை தேர்ச்சி அறிக்கைகளை ஒழுங்கின்படி வரிசைப்படுத்தி வைத்தார்கள். மாணவ தலைவர் களால் மேடை அமைப்புகள் சரிபார்க்கப்பட்டு கொண்டிருந் தன.

திடீரென்று கேட்போர் கூடத்தில் நிசப்தம் நிலை கொள் ளத் தொடங்கியது. தனியாக ஒரு சத்தம் வேகமாக நகர்ந்தது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொன்று மில்லை அதிபர் அவர்களின் சப்பாத்தின் பாதங்களில் இருந்து வரும் ஓசை. மேடையில் ஏறிய அதிபர் மாணவர்களைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். வழமையாக ஒன்றுகூடலின் போது கடுகடுப்பாக இருப்பவர் இன்று சாந்தமாக இருந்தார். இன்றோடு விடுமுறை தொடங்குவது அதிபருக்கும் மகிழ்ச்சியான விடயமாக இருந்திருக்க வேண்டும் என்று சில மாணவர்கள் மனதுக்குள் எண்ணிக் கொண்டார்கள். அதிபர் தனது வணக்கத்தையும் தெரிவித்து கடந்த தவணையின் பாடசாலையின் அடைவு மட்டங்கள் பற்றி பேசினார்.

பின்னர் முக்கிய நிகழ்வாக முதல் மூன்று நிலைகளை பெற்ற மாணவர்கள் வகுப்பு ரீதியாக மேடைக்கு அழைக்கப் பட்டு அதிபரால் பாராட்டப்பட்டு தேர்ச்சி அறிக்கைகளை அவர் கையினால் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு பெயர் கூப்பிடப்பட்டு மாணவர்கள் அழைக்கப்படும் போது ஏழாம் ஆண்டு சி பிரிவு முதலாமிடம் செல்வன் கோகுலன் என பிரதி அதிபர் ஒலிவாங்கியில் அழைத்தார். அனைவருக்கும் ஒரே வியப்பாக இருந்தது ஆசிரியர்கள் தங்களுக்குள்ளே முணுமுணுத்துப் பேசிக் கொண்டார்கள். ஏழாம் ஆண்டு மாணவர்கள் அனைவரது பார்வையும் அந்த ஒரு ஜீவன் மீது இருந்தது. பழுப்பு நிறமான கசங்கிய பழைய வெள்ளை சேட் இலவச சீருடையில் இரவலாக பெற்ற நீலக் காற்சட்டையும் அணிந்து பதட்டம் நிறைந்த முகத்துடன் கைகள் இரண்டும் சற்று நடுக்கம் கொள்ள, தாங்கிக்கொள்ளும் பூமிக்கு பாரம் கொடுக்கக் கூடாது என செருப்புடன் ஒட்டிக் கொண்ட காலுடன் கோகுலன் ஒரு ஓரத்தில் கூனிக்குறுகி நிற்கிறான். அந்த நிமிடம் அவனை அறியாமல் பெருமிதம் மெல்ல மெல்ல ஊடுருவி கொள்கிறது. இருந்தாலும் கடந்த ஒன்பது மாதங்களாக தன்னை அரவணைத்த அந்தப் பாடசாலையில் அவன் பெற்றிருக்கக் கூடிய நிலை அபாரம் என்று தான் கூறவேண்டும். ஒரு அகதி மாணவனாக அவன் பெற்றுள்ள இந்த நிலை அதிசயமாகத்தான் எல்லோருக்கும் இருந்தது. அதனால்தான் அந்த முணுமுணுப்பு அந்த அரங்கத்தில் அரங்கேறியது. ஆனால் அந்த ஒன்பது மாதங்களும் அவன் கடந்து வந்த சோதனைகள் ஏராளம்.

உள்நாட்டு யுத்த நிலை காரணமாக மாவட்டம் விட்டு மாவட்டம் இடம் பெயர்ந்த சோகம் சொல்லில் அடங்காதது. அவர்கள் பட்ட துயரங்கள் சொல்லி மாளாது. சித்திரை மாதமொன்றின் முன்னிரவில் அகதி பட்டம் சூடிய கோகுலனின் ஊரார், உடைமையை இழந்து உயிரை மட்டும் பற்றிக் கொண்டு வந்து, தற்சமயம் ஒரு இடைத்தங்கல் முகாமில் தஞ்சம் பெற்றுள்ளனர். ஏதோ அன்றாடம் கூலி வேலை செய்து கிடைக்கும் சிறு பணம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வழங்கும் நிவாரணங்களை கொண்டும் உயிர் வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் பொது மைதானம் ஒன்றில் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப் பட்டிருந்தன. அதிலே இவர்கள் தற்காலிகமாகத் தங்கினார்கள். கோகுலன் ஊரில் இருக்கும் போது நன்றாகப் படிக்கும் பிள்ளை என்பதால் அவனது அப்பா அவனை கூலி வேலைக்கு சிறிது நேரம் கூட அழைத்துச் செல்ல மாட்டார். ஒருநாள் தொண்டு நிறுவனத்தினர் கோகுலனின் முகாமிற்கு வந்து பாடசாலை செல்லும் மாணவர்களின் விவரங்களை எடுத்துக் கொண்டு சென்றனர். அடுத்த வாரமே அருகில் உள்ள பாடசாலையில் போய்ச் சேருமாறும் தாம் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் கதைத்து விட்டதாகவும் கூறி சில அப்பியாசக் கொப்பிகளையும் கொடுத்தனர். அதன்படி கோகுலன் உட்பட அங்கு இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் சுமார் 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் அருகிலுள்ள குறித்த பாடசாலையில் சேர்ந்து கொண்டார்கள். பாடசாலை வழமையாக காலையில் தொடங்கி பிற்பகல் 2 மணி வரை நடைபெறுவது உண்டு. ஆனால் இவர்களுக்கு பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வகுப்புகள் நடைபெற்றன. இடைத்தங்கல் முகாமில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களும் இணைந்து இவர்களுக்கு கற்பித்தனர். அதற்கான செலவை குறித்த நிறுவனம் ஏற்றுக் கொண்டது. சுமார் மூன்று மாதங்கள் இவ்வாறு மாலைநேர பாடசாலை இடம்பெற்றது. பின்னர் அந்த நிறுவனத்தினர் கோட்டக் கல்வி அதிகாரிகளிடம் பேசி வழமையாக பாடசாலை நடைபெறும் நேரத்திலேயே முகாம் சிறுவர்களும் படிக்க வேண்டும் என்பதற்காக அவ்வூர் மாணவர்களோடு இடைத்தங்கல் முகாமில் உள்ள மாணவர்களை இணைக்க ஏற்பாடு செய்தார்கள்.

ஒரு திங்கட்கிழமையன்று முகாம் மாணவர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு காலையிலேயே சென்றார்கள். பாடசாலைச் சீருடை இன்மையால் வீட்டிலேயே வழமையாக அணிகின்ற உடைகளில் நல்லதை ஒன்றை எடுத்து அணிந்து சென்றிருந்தார்கள். அங்கே அதிபரின் அனுமதியுடன் சிற்றூழியர் மூலம் மாணவர்கள் தற்போது படிக்கும் வகுப்புகளில் விடப்பட்டனர். கோகுலனும் அவனோடு இரண்டு பேரும் சேர்ந்து தரம் ஏழு வகுப்பிலே அமர்ந்தார்கள். வகுப்பாசிரியர் இவர்களின் பெயர்களை தினவரவு இடாப்பில் சேர்க்காமல் வேறு ஒரு தாளில் எழுதி மேலும் பல விவரங்களையும் கேட்டு குறித்துக் கொண்டார். பாடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வகுப்பில் உள்ள மற்றைய பிள்ளைகள் அவனையும் அவனது நண்பர்களையும் முகம் சுழித்துப் பார்த்தார்கள். புதிய பழக்கம் அல்லவா அதனால் இவ்வாறு பார்த்தார்கள்.

பாடத்திற்கு வரும் ஆசிரியர்கள் அனைவரும் இவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்து அருகில் வந்து இவர்களிடம் பெயர் மற்றும் விவரங்களைக் கேட்டு பரிதாபப்பட்டுக் கொண்டார்கள். ஏனைய மாணவர்களை இவர்களுடன் நன்றாகப் பழகி நண்பர்களாக ஏற்றுக் கொள்ளுமாறு கூறினார்கள். இருந்தாலும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் வேற்று கிரகவாசிகளை பார்ப்பதைப்போல இவர்களுடன் நடந்து கொண்டார்கள். தினமும் உலக உணவுத் திட்டம் மூலமாக இலவச மதிய உணவு வழங்கும் நடவடிக்கை அங்கே காணப்பட்டிருந்தது. பெரும்பாலும் வசதியான குடும்ப பின்னணியைக் கொண்ட மாணவர்கள் அந்த உணவை வாங்கி உண்பதில்லை. அதனால் அவர்களுக்கு உரிய பங்கும் முகாம் பிள்ளைகளுக்கு கிடைத்தது. படிப்பதற்கு இல்லாவிட்டாலும் மதிய உணவுக்காக என்றாலும் பாடசாலைக்கு தினமும் வரவேண்டும் என சிலமுகாம் பிள்ளைகள் எண்ணிக் கொண்டார்கள். அதனால் நாள் தவறாது சமூகம் தந்தார்கள்.

இவ்வாறு நாட்கள் பல கடந்தன. சில பிள்ளைகள் கோகுலனிடம் இரக்கம் கொள்ளத் தொடங்கினார்கள். இலகுவில் அவர்கள் பழகி விட்டார்கள். அவன் நடந்து கொண்ட விதம் பிடித்து விட்டது. கோகுலன் அனைவருடனும் அன்பாகவும் பேசிக்கொள்வான். அது அவனது இயல்பாக காணப்பட்டமையினால் பாடசாலையின் ஏனைய மாணவர்களும் அவனைத் தங்களோடு இணைத்துக் கொள்வதற்கு இலகுவாக இருந்திருக்கும் போல, இருந்தாலும் எல்லா மாணவர்களும் அவனோடு அன்பாக இருக்க வில்லை. சிலர் பாடப் புத்தகங்களை அவனுடன் பகிர்ந்து கொண்டார்கள். வகுப்பில் திறமைசாலியாக கோகுலன் மாறத் தொடங்கினான். அனைத்து பாட ஆசிரியர்களிடம் சிறந்த கவனத்தை இவன் பெற்றுக்கொண்டான். பாட ஆசிரியர்களில் சித்திர பாட ஆசிரியர் மிகுந்த அன்பாக இருந்தார். இடைவேளை நேரத்தில் தனது அறைக்கு அழைத்து தான் வீட்டில் இருந்து கொண்டு வரும் உணவுகளை கொடுப்பார். கோகுலனது குடும்ப பின்னணியினையும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

ஒருநாள் கோகுலனை அழைத்து பாடசாலைப் புத்தகப் பையும் சில உடைகளையும் அவர் கொடுத்தார். கோகுலன் அவற்றை நன்றியுடன் பெற்றுக்கொண்டான். தான் நன்றாக படித்து நல்ல நிலையில் இருக்கும் போது எல்லோரையும் நன்றாக கவனித்துக் கொள்ளத் திடசங்கற்பம் பூண்டான். வகுப்பில் கெட்டிக்காரனாக கோகுலன் விளங்கினான். அதனால் சில மாணவர்கள் அவன் மீது பொறாமை கொண்டார்கள். ஆசிரியர்கள் வகுப்பில் இல்லாத சமயம் அவனை தகாத வார்த்தைகளால் திட்டுவார்கள் 2 அல்லது 3 பேர் சேர்ந்து அவனை தாக்குவார்கள். கோகுலன் அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு அதிலிருந்து ஒதுங்கி இருப்பான். யாரிடமும் அவன் முறைப்பாடு கூட செய்வதில்லை. வருகின்ற தவணையில் எப்படி அதிக புள்ளிகளை எடுக்கப் போறாய், நாங்களும் அதை பார்க்கிறோம் என சவால் விட்டார்கள். இதுவரை குறித்த வகுப்பில் முதலாம் பிள்ளையாக வரும் அரவிந்தனும் சவால் விட்டான். பதிலுக்கு சவால் விடாது முயற்சி செய்வதே அனைத்துக்கும் மேலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கோகுலன் எண்ணிக் கொண்டான்.

இரவில் முகாம் கொட்டில்களில் மண்ணெண்ணெய் விளக்கு ஒளி கோகுலனின் படிப்புக்கு ஒளி கொடுத்தாலும் அடிக்கடி அதுவும் மறுக்கும் ஏனென்றால் அப்பா கூலி வேலை செய்து வீட்டிற்கு கொண்டு வரும் பணம் குடும்பத்தின் ஏனைய தேவைக்கு மட்டுமே போதுமாக இருந்தது. நுளம்புகள் அவனை தூங்க விடாது படிப்பதற்கு உதவி செய்தாலும், ஊசி போட்டு நான்கு நாட்கள் வரை அவனை மருத்துவமனையில் கிடத்தியது. யார் செய்த புண்ணியமோ எவ்வித ஆபத்துமின்றி குணமடைந்து விட்டான். இவ்வாறு தொடர்ந்த இந்த கடின வாழ்க்கையின் மத்தியில் படிப்பிலேயே குறிக்கோளாக இருந்த கோகுலன் ஒருவாறு கஸ்டப்பட்டு இறுதி தவணைப் பரீட்சையில் தோற்றினான்.


அரைகுறை அடிப்படை வசதிகளுடன் அகதி முகாமில் வாழ்ந்த அந்த சிறுவன் இன்று அதிக புள்ளிகள் பெற்று அதிபரால் பாராட்டப்படுவது அவனது முயற்சி என்பதா? இல்லை காலத்தின் கட்டாயமா? இறைவனின் அனுக்கிரகம் தானோ? கடந்து போன கஸ்டங்களை மனதில் அசைபோட்டுக் கொண்டு கோகுலன் மேடையை நோக்கி முன்னே நடந்தான். மாணவர்களின் கைதட்டல், சவால் போட்டவர்களின் முகமாற்றம், முகாமின் மற்றப் பிள்ளைகளின் குதூகலம், ஆசிரியர்களின் ஆச்சரிய பார்வை, மனதிற்கு ஒரு பக்கம் இதமாக இருந்தது. கம்பீர நடை நடந்து மேடையில் தேர்ச்சி அறிக்கை பெறும் தருணம், அதிபர் அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். கைகுலுக்கி தன் மார்போடு அணைத்துக் கொண்டார். அவரை கண்டாலே சிறுநீர் தன்னிலை மறந்து வெளியாகும் பயம் கோகுலன் முதல் அனைத்து மாணவர்களுக்கும் இருக்கும். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. கோகுலனின் திறமையை அதிபர் மெச்சினார். "முகாம் பொடியன்" "முகாம் பொடியன்" என்று ஏளனமாக முகாமில் இருந்து வருகின்ற பிள்ளைகளை இங்கு சிலர் அழைப்பதையும், பகிடி பண்ணுவதும், கேலி செய்வதையும் கண்டிருக்கிறேன். ஆனால் அதற்கு சரியான தண்டனை என்னால் வழங்க முடியவில்லை. நான் பிரம்பால் தண்டிப்பதை விட படிப்பினால் தண்டித்த கோகுலனின் திறமை பாராட்டத்தக்கது, கேலி செய்தவர்களையும் அலட்சியப்ப டுத்தியவர்களையும் தனது படிப்பினால் பின்தள்ளி விட்டான் என்றார். தேர்ச்சி அறிக்கையினை எடுத்து மீண்டும் ஒருமுறை புள்ளிகளைப் பார்த்தார். மீண்டும் ஒருமுறை கை குலுக்கிய அதிபர், கோகுலனிடம் உன்னால் முடியும் என்ற நம்பிக்கையை விதைத்து முதுகில் தட்டிக்கொடுத்தார். முகாம் பொடியனின் போராட்டப்பாதையில் முதல் வெற்றியாக அமைந்தது. சுருக்கென்று கண்களில் கண்ணீர் மேகத்தை கறுக்க வைத்திருக்கும் என்று எண்ணுதல் போல கோகுலனின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. விழி கடந்து கண்ணீர் அருவியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல்

அலெக்ஸ் பரந்தாமன்



# வழி தவறிய வாழ்வு

**மூன்று**

(முன்பக்கத் தொடர்ச்சி...

பதுங்குகுழிக்குள் இருந்த எவரும் எதுவும் கூறவில்லை. அமைதியாக இருந்தார்கள்.

"உங்கட கொப்பருக்கு எங்கை போனாலும், உந்தப் புளிப்பும் தடிப்பும் விட்டுப் போகாது...." பரமசிவத்தின் மனைவி தன்பிள்ளைகளைப் பார்த்துக் கூறியது நல்லவேளை அவருக்குக் கேட்கவில்லை)

"இங்க பாருங்க... நீங்க உந்தப் பணக்கார முதலாளிக்கிட்ட அவமானப்பட வேணாம். ஆண்டவன் நம்மைக் காப்பாத்துவானுங்க. கவலைப்படாதீங்க..."

மருதனின் மனைவி கருப்பாயி மனதை ஆற்றுப்படுத்தும் வார்த்தைகள் கொண்டு, தன் கணவனைத் தேற்ற முனைந்தாள்.

"நாமதான் அந்தப் பங்கரைக் வெட்டிக் கட்டிக் கொடுத்தது. கொஞ்சம்கூட ஈவுஇரக்கம் இல்லாத மனிசரா இருக்காங்க..." மருதனுக்கு சாம்பசிவத்தின் செயல் மனதுக்குள் இனம்புரியாத வேதனையையும், சினத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவங்கட குணமே அப்படித்தாங்க. எஸ்டேட்காரரெண்டா எப்பவுமே இளக்காரமாத்தான் பார்ப்பாங்க. தங்கட தேவைக்கு மட்டும் நம்மளைப் புடிப் பாங்க. சரிவிடுங்க... போகட்டும். நம்மட உசிருக்கு ஒன்னும் ஆகயில்லைத் தானுங்க." கருப்பாயி மீண்டும் அவனைத் தன் வார்த்தைகளால் ஆற்றுப் படுத்தினாள்.

இச்சம்பவம் நிகழ்ந்து ஒருமாதம் கடந்து விட்டிருந்தது. மாத்தளன் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருவோரின் எண் ணிக்கை குறைவாக இருந்தாலும், மக்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தனர். இதன்நிமித்தம் இடநெருக்கடி மேலும் உருவாக ஆரம்பித்தது. சில இடங்களில் இடம்பிடிக்கும் விடயத்தில் அடிதடி களும் நிகழ்ந்தன. பாதிக்கப்பட்ட எவரும் இயக்கத்திடமோ அன்றி காவல்துறை யினரிடமோ முறைப்பாடு கொடுக்கச் செல்லவில்லை. அவர்கள் போராட்டத் திற்கு ஆள் சேர்க்கும் நிலையில், இருந் தனர். எனவே , அவர்களும் இதுதான் தருணமென நினைத்து, முறைப்பாடு கொடுக்கச்செல்பவர்களை அடிபாட்டுக் களத்திற்கு அனுப்பக்கூடும்... என்ற அச்சம் எல்லோரிடமும் நிலவியிருந்தது.

மருதனுக்கு இரண்டு நாள்களாக எதுவித தொழிலும் கிடைக்கவில்லை. எந்தவொரு தொழிலுக்கான வாய்ப்பும் அங்கு இருக்கவில்லை. கையில் உள்ள 'இருப்பை' வைத்து, அவர்கள் ஏதோ சமாளித்துக் கொண்டிருந்தார்கள். இதுதவிர, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கப்பல்மூலம் கொண்டுவந்து வழங்கும் அற்பசொற்ப பொருள்களான அரிசி, மா, சீனி, பருப்பு, எண்ணெய்... போன்ற பொருள்களை நம்பியே பெரும் பாலானவர்கள் இருந்தார்கள். அவர்களில் மருதனது குடும்பமும் ஒன்று. சங்கம் வழங்கும் உணவுப் பொருள்கள் அம்மக்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. ஆங்காங்கே களவுகள் நிகழத் தொடங்கின. பணம், நகைகளை விட, திருடர்கள், சமைத்து வைத்த சாப்பாடுகள், அரிசி, மாப்பொருள்கள் என்பதைத் திருடுவதிலேயே கண்ணாயி ருந்தார்கள். சில இடங்களில் பிடிபட்டு, மக்களால் நையப்புடைக்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட சம்பவங்களும் அரங் கேறியிருந்தன.

இராணுவம் முன்னேறிவரும் பகுதிகளில்இருந்து, வெளியேறியவர்கள், தங்கள் உழவு இயந்திரப்பெட்டிகளில் தென்னங்குற்றிகளையும் ஏற்றிக்கொண்டு வந்து, மீண்டும் தாங்கள் தங்கியிருந்த இடங்களில் பதுங்குகுழி அமைத்துக் கொண்டிருந்தார்கள். சிலருக்கு பதுங்கு குழி அமைக்க ஆட்கள் தேவைப்பட் டபோது, மருதனுக்கு வேலை கிடைத் தது. போய்வருவான். அவர்கள் கொடுக்கும் தின ஊதியம் சிலநாள்கள் வரையிலுமே போதுமானதாக இருந்தது. பசி, பட்டினி, நோய், உயிரச்சம்... ஆகியவற்றோடு அங்கிருந்த அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிக் கொண்டிருந்தார்கள்.

ஷெல் வீச்சுகள் ஓய்ந்து விட்டன. மருதன் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தான். பக்கத்தில் மனைவி கருப்பாயி, மகன் மணிகண்டன் இருவரும் இன்னமும் உறக்கம் கலையாதவர்களாக ஆழ்ந்த நித்திரையில் கிடந்தார்கள்.

பொழுது நன்கு புலர்ந்து விட்டது. கிழக்கு வானிலிருந்து சூரியன் மெல்ல எழ ஆரம்பித்தான். கடற்கரையில் இருந்து மலவெக்கையானது காற்றோடு தரப்பாள் வீடுகளுக்கூடாக வந்து கொண்டிருந்தது. ஆரம்பத்தில் இந்த வெக்கை மருதனுக்கும் அவனது மனைவிக்கும் அருக்களிப்பை ஏற்படுத்தியிருந்தாலும், நாளடைவில் அவர்களின் நாசிக்கு அது பழக்கப்பட்டுப் போனது. அவர்களது மகன் மணிகண்டன் மட்டும் அந்தத் துர்மணத்தை உள்ளீர்க்க முடியாமல் அருக்களித்து, அடிக்கடி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

“ மணி... சாரத்தால மொகத்தை மூடிக்கிட்டுப் படு மகன்...”

வெளியில் இருந்து மருதன் குரல் கொடுக்கிறான். அக்குரலொலி கேட்டு, கருப்பாயிக்கு நித்திரை கலைந்து விடுகிறது. அவள் படுக்கையில் இருந்து எழுந்தாள். பக்கத்தில் மகன் தந்தையின் சாரத்தால் முகத்தைமூடிப் படுத்திருக்கும் நிலையைக் கண்டதும், அவளுக்கு நிலைமை புரிந்து விடுகிறது. குனிந்து அவனது தலையை வாஞ்சையோடு தடவிவிட்டு வெளியே வருகிறாள். அன்றைய ஜீவனோபாயத்துக்கான மனிதர்களின் செயல்பாடுகள் ஆரம்பமாவதை அவளது கண்கள் கண்டுகொள்கின்றன.

“ என்னங்க... மொகத்தைக் கழுவிப்புட்டு, வாங்க... சாயத்தண்ணி தரலாமுங்க...”

மருதன் எழுந்து கொட்டிலின் பின்பக்கம் போனான். கூடவே அவளும் சென்றாள். பிளாஸ்ரிக் வாளியில் இருந்த நீரை அள்ளி வாயைக் கொப்பளித்து, பல்லுத்தீட்டி, முகமும் கழுவிக்கொண்டு, முன்பக்கத்துக்கு வந்தார்கள்இருவரும். கொட்டினுள் மூலையோரம் கருப்பாயி தேநீர் போடுவதற்கான ஆயத்தத்தில் இருந்தாள். மருதன் அவளுக்குப் பக்கத்தில்போய் அமர்ந்து கொண்டான்.

“இன்னைக்குத் திங்கிறதுக்கு ஏதாச்சும் இருக்கா புள்ள...?”

“மாக் கொஞ்சம் இருக்குதுங்க. அந்தியில ரொட்டி சுடுவமுங்க...” என்று கூறிய கருப்பாயி, திரும்பி மணிகண்டன் படுத்திருக்கும் இடத்தைப் பார்த்தாள்.

“ பாவம் நம்மட புள்ள... ஊரோட என்னா எப்படியெல்லாம் சாப்பிடும்....!” என்று கூறியவள், “ஆமா... உந்த இயக்கப்பயலுக ஆமிக்காரரை அடிச்சுத் தொரத்துவாங்களா...? இப்ப என்னாண்ணா... அவங்க இவங்கள அடிச்சிக்கிட்டு வாறாங்க. இனி உந்தப் பயலுக தொரத்துவாங்களா...?” என்று அப்பாவித் தனமாகக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தொரத்தத்தானே வேணும். தொரத்தாம இவங்க எங்க போறது? எப்படியும் துரத்திப்புடுவாங்க...” மருதன் ஒரு நம்பிக்கையோடு கூறினான். இவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கையில், மகன் மணி நித்திரை கலைந்து, அவர்கள் இடத்திற்கு வந்து குந்தினான்.

“ மகன் மொகத்தைக் கழுவிப்புட்டு வா... அம்மா சாயத்தண்ணி தாறன்...” மணி மறுபேச்சுப் பேசாது, எழுந்து வெளியே சென்றான்.

உள்ளங்கையில் சிறிதளவு சீனியைக்கொட்டி, அதை நக்கியவாறு... வெறும் சாயத்தண்ணியைக் குடிக்க ஆரம்பித்தான் மருதன். திடீரென அருகில்... மிகமிக அருகில் மூன்று துப்பாக்கி வெடியொலிகள் கேட்டன. மருதன் திகைத்துப் போனான்.

வெளியே முகம் கழுவிக்கொண்டிருந்த மணி, வெடிச்சத்தம் கேட்டதும், குளறியபடி ஓடிவந்து, கொட்டிலுக்குள் நின்ற தன்தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

“என்னங்க இது? வழக்கமா ஷெல்லுகள்தானே வந்து விழுந்து வெடிக்கிறது. இன்னிக்கு இது ஏதோ அடிபாட்டில வெடிக்கிற சத்தம்மாதிரிக் கேக்குதுங்க...” கருப்பாயி பயந்து போனாள். அவளது குரலில் பிசிறல் தென்பட்டது.

உள்ளங்கையில் இருந்த சீனி முழுவதையும் வாய்க்குள் போட்டுவிட்டு, வெளியே சென்று பார்க்க விரும்பிய மருதனின் கையைக் கருப்பாயி பற்றிப்பிடித்து இழுத்தாள்.

“ வேண்டாங்க... வெளியில போக வேணாம். அவுங்க ஆரையோ மனிசரைச் சுட்டுப்புட்டாங்க போல இருக்குதுங்க...”

மருதன் ஒருகணம் தடுமாறினான். போதாக் குறைக்கு, மகன் மணியும் அவனைத் தடுத்தான்.

“ வேணாப்பா... அங்கிட்டு போகாதீங்கப்பா. எனக்கு பயமாயிக்கு.” அதற்குப் பிறகு மருதன் வெளியே செல்ல விரும்பவில்லை.

நிமிடங்கள்... மெல்லெனவாய் நகர்ந்து கொண்டிருந்தன.

( இன்னும் வரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிஞர் உமா மகேஸ்வரம்பிள்ளை



உமாமகேஸ்வரன் சித்தப்பா என நாம் அன்புடன் அழைக்கும் எனது மாமனார் (அப்பா வழி ) பண்டிதர் உமா மகேஸ்வரம்பிள்ளை அவர்கள் சிவபதம் அடைந்தார். சிறுவயதில் எனது மச்சான்மார் மச்சாள்மாருடன் சேர்ந்து அவர்கள் அழைப்பதுபோல் நானும் சித்தப்பா என்று அழைத்துப் பழகிய உறவு. அவரது அபரக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

இவர் தெல்லிப்பளை விழிசிட்டி பண்டிதர் கதிரிப்பிள்ளை அவர்களின் புதல்வர் ஆவார். இவர் ஒரு தமிழ்க்கடல். ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர். தொல்காப்பியத்தில் இருந்து வைரமுத்து வின் கவிதைகள் வரை அவர் உரையாடலில் பொங்கிப் பாயும். சைவத்திருமுறைகள் அவர் வார்த்தைகளில் துள்ளி விளையாடும். சிறு வயதில் இருந்து இவரின் சைவத் தமிழ்ச் சிந்தல்களைக் கேட்டு வளர்ந்த பேறு மறக்கமுடியாதது. எமது வாழ்க்கை யில் மறுக்கமுடியாததோர் ஆளுமை இவர்.

யாழ்ப்பாணம் செல்லும் காலங்களில் அடிக்கடி சென்று அளவளாவி வருவது வழமை. குஞ்சு அன்ரி என்னைக் குறை சொல்லுவா "நீ அவரைத் தான் பார்க்க வந்தாய் என்னை அல்ல" என்று. ராஜி அன்ரி மகன் எனது மச்சான் ருஷாங்கன் கோபம் கொள்வான் "தன்னிடம் வருவதில்லை" என்று. அந்தளவுக்கு இன்ற ளவும் என்னை ஈர்க்கும் ஆளுமை உமாமகேசுவரன் சித்தப்பா(மாமா). சைவ மரபின் அந்தத் தலைமுறைக்குரிய இறுதித் தூண்களில் ஒருவர். ஞாயிற்றுக்கிழமை 21.04.2024 அன்று சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

இவர்
பன்னிரு திருமுறை முழுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1254* பதிகங்கள்
*18,268* பாடல்கள்
கோயில் வரலாறு
அருளாளர் வரலாறு
ஆசியுரைகள்
என அச்சுப் பதிப்புக் காலங்களில் (*1997-1998*) மயிலாடுதுறை தருமபுரம் திருமடத்தில் ஓராண்டுக்கு மேலாகத் தங்கி இருந்தும் இரண்டாவது முறையாகத் தமிழகம் வந்து (*2000-2001*) சென்னை, தியாகராயநகர் தருமபுரம் திருமடக் கிளையில் பல மாதங்கள் தங்கி இருந்தும் மெய்ப்புப் பார்த்த பெருமகனார்.
இந்த உரைகளே இன்றுwww.thevaaram.org தளத்தில் உலகெங்கும் வலம் வந்து கொண்டிருக்கின்றன.
தருமபுரம் ஆதீனம் *26*ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமச்சாரியாரின் ஆலோசகராக அக்காலங்களில் பணிபுரிந்தார். தமிழில் கற்றுத் துறை போந்த புலமையாளர். யாப்பு இலக்கணம் கைவரப் பெற்றவர். வடமொழியை நன்கு கற்றறிந்தவர்.
ஆங்கில மொழி ஆசிரியராக இலங்கையில் பல பாடசாலைகளில் பணிபுரிந்தவர். ஆங்கிலத்தில் வித்தகர்.
பன்னிரு திருமுறையின் *23* திருப்பண்களையும் வகை தெரிந்து பிரித்தறிபவர். ஒவ்வொரு பண்ணிலும் விரிவுகளையும் சார்புகளையும் வேறுபாடுகளையும் நுணுக்கமாக அறிந்தவர். இசைஞானத்தில் நுண்மா நுழைபுலத்தர். இவரது பிள்ளைகள் (எனது மச்சான்மார்) இருவரும் சிறு வயதிலேயே பாடல்களின் இராகங்களை வகையறிந்து அடையாளம் கண்டு சொல்வதையும், பெரியபுராணத்தின் *63* நாயன்மார் வரலாறுகளை முழுமையாக எடுத்துச் சொல்லுவதையும் பார்த்து நாமெல்லாம் சிறுவயதில் வாய் பிளந்து நின்ற நிகழ்வுகளை மறக்கமுடியாது.
கர்நாடக இசையை நன்கு தேர்ந்தவர். சென்னையில் வாழ்ந்த காலங்களில் இசைக் கச்சேரிகளுக்குத் தனது உடல் நலக் குறைவையும் பாராது மாலை வேளைகளில் சென்று வருபவர்.
செதுக்கிச் செதுக்கிக் கூர்மையான யாழ்ப்பாணச் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் உச்ச நிலை அவரது இயல்பு. வலிந்து பேசார். இனிய சொற்களின் உறவாளர். எளிதில் எவருடனும் இணையார். இணைந்தால் பிரியார். பற்றுகள் குறைந்தவர். ஆகக் குறைந்த ஆசைகள் அவருக்கு.
தவத்திரு தருமபுரம் *26*வது சந்நிதானத்தின் முழுமையான ஆசீர்வாதத்தையும் வாழ்த்துக்களையும் பெற்ற திருமகனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரோடு இணைந்து ஈழத்தில் இருந்து சென்று பன்னிரு திருமுறைகளையும் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்களின் அழைப்பின் பேரில் தருமபுர ஆதீனத்தின் சார்பாக மெய்ப்புப் பார்த்தவர்கள் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா அவர்களும் பண்டிதர் உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்களும். இவர்களுடன் இணைந்து பணியாற்றியவர் தருமபுரம் ஆதீனப் புலவர் வித்வான் க. ஆறுமுகம் அவர்கள்.

இவர் தருமபுர ஆதீனத்தில் தங்கியிருந்து மெய்ப்புப்பார்த்த காலத்தில் குமாரசாமித் தம்பிரான் என்னும் பெயரில் தம்பிரான் சுவாமிகளாக இருந்த இன்றைய 27வது தருமையாதீனக் குருமணிகள் இவருடன் பழகிப் பல விடயங்களில் தெளிவு பெற்றிருக்கின்றார்கள்.

ஆதீனத்தில் தங்கியிருந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளில் அவர் எம்முடன் பகிர்ந்தது ஒன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அங்கு கொசுத்தொல்லை அதிகமாக இருந்தது. உமாமாஸ்வரன் அவர்கள் "இதென்ன, நுளம்பு ஒரே தொல்லையாய் இருக்கிறதே" என்று சலித்துக்கொண்டார். இதைக்கேட்ட வித்துவான் ஆறுமுகம் அவர்கள் "என்ன ஐயா, ஈழத்தில் இருந்து வந்து நுளம்பு, குழம்பு என்று பேசிட்டு இருக்கீர் கொசு என்று நல்ல தமிழில் சொல்லும் ஐயா" என்று இவருடன் சலித்திருக்கிறார். தமிழகத்தில் நுளம்பு என்ற வார்த்தை புழக்கத்தில் இல்லை, அரிது. அவர்கள் கொசு என்றுதான் சொல்வது வழமை.

இதைக்கேட்ட உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்கள் 11ம் திருமுறையில் பட்டினத்துப்பிள்ளையார் பாடிய கோயில் நான்மணிமாலையில் வருகின்ற

**"நின்னருள் ஆணை வைப்பிற்**
**காணொணா அணுவும் வானுற நிமிர்ந்து காட்டும்**
**கானில்வால் நுளம்பும் கருடன் ஆதலினாலே"**

என்ற வரிகளை எடுத்துக்காட்டி ஈழத்தமிழ் மரபில் அன்றாட வழமையில் உள்ள நுளம்பு என்னும் சொல் திருமுறைகளில் எடுத்தாளப்பெற்ற பழமையான தூய தமிழ்ச்சொல் என்பதை நிறுவினார்.

இதேபோல் நான் எழுதிய "நாவலர் பற்றிய விமர்சனங்களுக்கு ஓர் பதில்" "A Rejoinder to Criticisms about Navalar" என்னும் நூலை 2021 இல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட இருந்தபோது அதன் தலைப்பு " ஓர் பதில்" என இருப்பது இலக்கண வழு, அது "ஒரு பதில்" என்பதே சரியானது என எனக்கு கொழும்பு வந்தபோது அறிவுறுத்தப்பட்டது. இச் சந்தேகம் தீர்ப்பதற்கு உமாமகேஸ்வரன் சித்தப்பா (மாமா)விடம் யாழ்ப்பாணம் சென்று பேசினேன். இலக்கணவிதிப்படி "ஓர் பதில்" என்பது தவறு என்று சுட்டிக் காட்டிய அவர் ஆயினும் "ஓர்" என்பது தமிழில் இன்று வழக்கத்திற்கு வந்து விட்டது என்று கூறி எடுத்துக் காட்டாக வைரமுத்துவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்புள்ள மான்விழியே
நான் ஆசையில் ஓர் கடிதம்"
என்னும் சினிமாக் கவிதை வரிகளை எடுத்துக்காட்டி ஆற்றுப்படுத்தினார். இலங்கையிலும் பண்டிதர் மற்றும் வித்துவான் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மரபுத்தமிழாட்சி பற்றிப் பாடம் நடத்தி வந்த பேராசான் இவர். பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும், மரபுவழித் தமிழறிஞர்களும் இவர் இல்லத்தை நாடி வந்து இவருடன் உரையாடியும் பாடங்கேட்டும் பயனடைந்து செல்வர்.

இவருடைய முழுமையான வரலாறு அறிஞர் பெருமக்களிடமிருந்து கட்டுரைகளாகப் பெறப்பட்டு அவரின் ஆக்கங்களுடன் சேர்த்து நூல் வடிவில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்பது எனது அவா.

(பிரவீணன் - முகநூலிலிருந்து)

---

# கடலலைகளை மேவிய கதை

முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தைப் பகைப்புலமாகக் கொண்டு பல நாவல்கள் வெளியாகியுள்ளன. ஒவ்வொரு நாவலும் யுத்தத்தை ஆதரிப்பனவாகவோ அல்லது யுத்தத்தை விமர்சிப்பனவாகவோதான் வெளிவந்துள்ளன. ஆனால் எல்லாவற்றிக்கும் மேலாகக் கடலலைகளை மேவிய காதை தன்னைத் தனித்துவமாக அடையாளம்காட்டியபடி வெளிவருகிறது. உண்மைகளை உண்மையாகவே எடுத்துரைத்தபடி இந்த நாவல் வருகிறது. மூத்த எழுத்தாளரும் வன்னிமண் தந்த எழுத்தாளருமான அலெக்ஸ் பரந்தாமன் அவர்களது முதல் நாவலிது. நாவல் பற்றிக் கூறி சுவையைக் கெடுக்க நான் விரும்பவில்லை. வாங்கிப் படியுங்கள் பல விடயங்கள் உங்களுக்குப் புரியவரும்.





-மலைக்குருவி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபக் காதல்



**எம். கே. வேணி**

நல்லூர் முருகா ! நான் எந்தவித பிரச்சினையுமின்றி கொழும்புக்கு போய் சேர்ந்துவிட்டால் நான் அடுத்த வருடம் திருவிழாவில் காவடி எடுத்து நேர்த்திக் கடன் செலுத்துகிறேன் அப்பனே முருகா! என்று சுன்னாகத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட ஆயத்தமான சுவேதன் நல்லூர் முருகனை மனதார வேண்டிக் கொண்டான்.

தன் பெற்றோரிடம் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டு யாழ் நகரிலிருந்து இரண்டாயிரம் கொடுத்து கார் ஒன்றை பிடித்து கொண்டு கிளாலிக்கு வந்து சேர்ந்த சுவேதன், அங்கு நின்ற மக்கள் சனக் கூட்டத்தைப் பார்த்தவனுக்கு ஏதோ திருவிழாவுக்கு மக்கள் கூடி இருப்பதைப் போல எண்ணத் தோன்றியது. இந்த நவீன உலகில் இப்படியும் ஒரு அவல நிலையா, உலகம் இன்று நவநாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் ஏறிநின்று நவீன யுகத்தில் கல்வி அறிவில் மேம்பட்டு அரசாங்கத்துறையில் பெரிய பதவிகளில் அதிகமானோர் அதிகாரிகளாக இருக்கும் பல்துறைகளில் கல்வி மான்கள் நிறைந்து பொருளாதாரத்தில் உயர்ந்து விளங்கும் யாழ்ப்பாண மக்களின் அவலமான அபாயமான பயணத்தைப்பற்றி பலவாறு சிந்தனைகளுடன் தனது பயண பொதிகளுடன் நெரிசலில் இடிப்பட்டு வள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி கொண்டான் சுவேதன். அதிக சன நெரிசலோடு நிறைய பொதிகளுடன் பாரம் தாங்காமல் வள்ளம் ஏரியின் நடுப்பகுதிக்கு நெருங்க நெருங்க வள்ளம் வேகமாக ஆடத் தொடங்கவும் மீண்டும் பயம் அவளைத் தொற்றிக் கொள்ள "முருகண்டி பிள்ளையாரே" எவ்வித ஆபத்துமின்றி எங்கள் அனைவரையும் அக்கரையில் கொண்டு போய் சேர்த்து விடு என்று எல்லோருக்குமாக சேர்த்து மனதார முருகண்டி பிள்ளையாரையும், வேண்டிக் கொண்டாள், காற்று பலமாக வீசவே கிளாலி எரித்தண்ணீர் வீசி, அடித்தது பிரயாணிகள் அனைவரும் நனைந்தனர். சுவேதன் வள்ளத்தின் ஓரத்தில் நின்றபடியால் நன்றாக நனைந்து விட்டான். ஆனால் கடும் வெயிலில் அந்த தண்ணீரில் நனைந்தது இதமாகவே இருந்தது வெயில் காலம் என்றபடியால் தண்ணீர் குறைவாக காணப்பட்டதால் இதற்கு மேல் வள்ளத்தை செலுத்த முடியாது என்று கூறி இடுப்பளவு தண்ணீர் இருக்கும் போதே வள்ளத்தை நிறுத்தி விட்டார்கள், எனவே தண்ணீரில் நனைந்தவர்கள் இப்போது சேற்றில் கால்கள் புதைய புதைய ஒருவாறு மறுகரைக்கு வந்து சேர்ந்தார்கள். அடுத்து அகோர வெயிலில் தரை வழியே நடந்து செக்பொயின்றுக்கு போனார்கள், சுவேதன் அணிந்திருந்த காற்சட்டையில் திட்டுத் திட்டாய் செம்மண் பட்டு செந்நிறமாக மாறியிருந்தது. இப்போது அதெல்லாம் பற்றி யோசிக்க முடியாது பயணப் பொதி பாரம் கொடுக்க மக்களோடு சேர்ந்து தானும் சோதனை சாவடியை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான்.

நடக்கத் தொடங்கிய அவனுக்கு தான் முன்பு சிறுவனாக இருந்தபோது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சென்ற இனிமையான ரெயில் பயண அனுபவங்கள் மனத்தில் சின்னத்திரை நாடகமாக சிறு பிராயண நினைவுகள் ஓடத் தொடங்கின. சுவேதன் அப்பா யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் ஆசிரியராகவும், தாய் ஒரு வங்கியில் ஊழியராக தொழில் புரிந்தார். கல்லூரி விடுமுறை காலங்களில் அவர் குடும்பதாரை அழைத்துக் கொண்டு கொழும்புக்கு வெள்ளத்தையில் வசிக்கும் தன் தம்பியின் வீட்டுக்கு போவதுண்டு.

அப்போதெல்லாம் விடியற்காலை ஐந்து மணிக்கு புறப்படும் இன்டர்சிட்டி ரெயில் பகல் பன்னிரெண்டு மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடைவிடும் மத்தியானசப்பாட்டிற்கு வெள்ளத்தைக்கு போய்விடுவார்கள் சித்தப்பா வீட்டிற்கு அவனின் தாயார் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விரதம் பிடித்து மதிய நேரம் வெள்ளவத்தையிலே வரத்தை விடுவார். அவனின் சித்தப்பாவும், சித்தியும், பிள்ளைகளும் இவ்வர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து சமைத்துவிட்டு காத்திருப்பார்கள் ரெயில் பயணம் மேற்கொள்வதில் அலாதி பிரியம் அவனுக்கு சிலவேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் நண்பர்களும் கொழும்பில் இருக்கும் தன் உறவினர் வீடுகளுக்கு செல்ல ஒரே ரயிலில் பயணம் மேற் கொள்வர்கள் அம்மாவிடம் காசு வாங்கி ரெயிலில் விற்கும் தீன் சாமான்களை எல்லாம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு அப்பா சித்திரையாகிட அவருக்காக, சுடுநீர் போத்தலில் அம்மா கொண்டுவரும் தேநீரையும் சகோதர்களுடன் சண்டைப் பிடித்துக் அருந்தி யன்னலுக்கு வெளியோ தலையை நீட்டிக் கொண்டு கடலையை எறிவதும், வெளியில் நிற்கும் ஆட்களுக்கு கைகாட்டுவதுமாக கொழும்புக்கு போய் சேர்வதே தெரியாது. சிறிய பிராய பசுமையான நினைவுகளுடன் நடந்த அவனுக்கு களைப்பும் தெரியவில்லை.

ஓபத்தைக்கு வந்து இயக்க தடை முகாமில் சோதனையை முடிந்த பின் பஸ்ஸ ில் ஏற்றப்பட்டு, அமர்ந்தவன் பஸ், பிராயணிகளின் மிகவும், மோகமான அவல நிலைமையை பார்த்தவனுக்கு நெஞ்சம் கனத்தது. சீ.... என்ன தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வளவு அவல நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டன. முன்பு என்றால் வெளிநாடு போகத்தான் கடவுச் சீட்டுப் பெற வேண்டும். இப்போது சொந்த மண்ணிலே ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு கூட பாஸ் எடுக்க வேண்டியுள்ளது. எல்லாம் தமிழ் மக்களின் தலைவிதியோ, முன்பு பாடசாலையில் தான் கேள்வி கேட்டு சோதனை நடத்துவார்கள். இங்கு பயணம் என்று வெளியில் இறங்கினாலே சோதனை! சோதனை! " சோதனை மேல் சோதனை போதுமடா சாமி" என்ற சினிமா பாடல் எங்களுக்காகவே எழுதப்பட்டது. போல் என்று எண்ணத் தோன்றியது அவனுக்கு,

ஒருவாறு எல்லா சோதனைகளும் முடிந்து தாண்டிக் குள தடை முகாமில் பஸ் வந்து தரித்து நின்றது, அங்கும் பயணிகள் மிக நீண்ட வரிசையில் பொதிகளுடனும், சிறு குழந்தைகளுடன், நோயாளிகளுடனும், கர்ப்பிணிப் பெண்களும் வயோதிபர்களும் நோயாளிகளும் சோதனை சாவடியில், கடும் வெளியில் காத்திருந்தனர். அது அனுமார் வாலைப் போல் நீண்டிக் கொண்டே போனது. மீண்டும் இராணுவ சோதனை முடிந்து, வவுனியா நகருக்கு வந்து சேர்ந்தவுடன் தான் நிம்மதி பெருமூச்சுவிட்டான் சுவேதன். அவனுடன் வந்தவர்களின் பயம் விட்டு நிம்மதி பெருமூச்சுவிட்டனர். யாழ்ப்பாணத்தில் வெகு காலங்களாக மின்சாரமின்றி விளக்கு வெளிச்சத்தில் பழகிப்போன கண்களுக்கு வவுனியா நகரின் மின் ஒளி சுவேதனின் கண்களை கூச வைத்தன. வேறு நாட்டுக்கு வந்தது போல் உணர்வு தோன்றியது.

சுவேதன் ஆசிரியர் பரீட்சையில் சித்திபெற்று அவனுக்கு மலையகத்திலிருக்கும், பலாங்கொடை என்ற இடத்திற்கே முதன்முதல் நியமணம் கிடைத்திருக்கிறது. அதற்காகத்தான் அவன் இவ்வளவு பிரச்சினைக்கு மத்தியில் கொழும்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறான். தன் சித்தப்பா வீட்டில் தங்கிவிட்டு பலாங்கொடையில் ஆசிரியர் நியமனம் பெறுவதற்காக!

அப்பப்பா! யாழிலிருந்து கொழும்பையோ, ஏனைய பிரதேசங்களையோ அடைய எத்தனை தடைமுகாம்கள் எத்தனை வினாக்கள், சரியான பதில் அளிக்காவிட்டால், உயிருக்கு கூட உத்தரவாதமில்லை, பழைய கால விக்கிரமாதித்தன் கதைகளிலே வருவதைப் போல தலைவெடித்து விடுமோ! உருவம் மாறிவிடுமோ? என்ற உணர்வுடனே வந்து சேர வேண்டியுள்ளது. இதெல்லாம் பார்க்கும் போது மனிதன் பிறக்கும் போது சுதந்திரமாவே பிறக்கிறான். ஆனால் அவன் வளர்ந்த பின் ஒவ்வொருமுறையும் சங்கிலியால் பிணைக்கப்படுகிறான். (ஆயெ ளை டிழசெ கசநந லநவ ாந ளை நஎநசல றாநசந ைெ உாயசைள) என்ற ஆங்கில பழமொழியே சுவேதனின் நினைவுக்கு வந்து போயின.

வவுனியா வந்தவனுக்கு களைப்புடன் பசியுடன் வயிற்றைக் கிள்ளவே ஒரு சைவக் கடைக்குள் நுழைந்தான் சாப்பாட்டுக்கு ஓடர் கொடுத்துவிட்டு அமர்ந்தவன் எதிரில் இருந்த தொலைக்காட்சியில் பார்வையை செலுத்தினான் அதிலிருந்து சமாதான புற ஒன்று பறக்க அதனைத் தொடர்நது "வெள்ளிக் சிறகடிக்கும் வெண்புறாவே" என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. பாவம் இந்த வெண்புறாவும் மனிதர்களிடம் அகப்பட்டு சமாதானத்திற்காக பாடுபடுகிறது போலும் பாடல் முடிந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு சோமாலிய தாய் குழந்தைக்கு பால் கொடுக்க முயற்சி செய்யும் காட்சியும், தாயும் சேயும் போசாக்கு இன்றி வெறும் எலும்பும் தோலுமாக காட்சி அளிப்பதையும் பார்த்த அவனுக்கு எமது நாட்டிலும் தொடர்ந்து நீடித்தால் யாழ்ப்பாண மக்களின் நிலைமையும் இப்படித்தான் அமையும் என்று எண்ணியவன் ரயில் புறப்படும் நேரம் நெருங்கவே, பாஸ், ரயில் டிக்கட் எடுக்கவும் ரெயில் அடியை நோக்கி நடந்தான்.

இரவு ரெயிலில் ஏறி இருக்கை ஒன்றை பிடித்து அமர்ந்து கொண்ட சுவேதன் களைப்பினால் சிறிது நேரத்தில் நன்றாக நித்திரையாகிட்டான். சிறிது நேரத்தில் யாரே தோளில் தட்டி சுவே! சுவே! என்று அழைக்கும் சத்தம் கேட்டு கனவா! நன்வா என்று திடுக்கிட்டு விழித்தவன் தன்னுடன் முன்பு சர்வசலாச்சாலையில் ஒன்றாக பயிற்சி பெற்ற சகோதர மொழி நண்பன் நிசங்கவை கண்டு மிக சந்தோக்ஷப்பட்டான். "ஆ கோமத சுவே இத்தின் தென் கொயித யன்னே" என்று நிசங்க கேட்கவும் அவனும் தனக்கு தெரிந்த சிங்களத்திலும் ஆங்கிலம், தமிழ் எல்லாம் கலந்து தனக்கு பலாங்கொடை பாடாசலை ஒன்றில் விஞ்ஞான ஆசிரியராக பணி புரிய நியமனம் கிடைத்திருப்பதாகவும் கூறினான். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப் படிப்பு படிக்கும் போது அங்கு தனக்கு நண்பனான நிசங்கவிடம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் தற்போது கொழும்பில் உள்ள ஒரு பிரபல கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக கடமை புரிவதாகவும் கூறியவன் அநுராதபுரத்திலிருந்து தனது மாமாவின் வீட்டிற்கு வந்ததாகவும் கூறியவன் இன்றைய நமது நாட்டு மக்களின் நிலையை எண்ணும் போது தானும் கவலையடைவதாகவும் சொல்லி இருவரும் கதைத்து கொண்டு ரெயில் பயணத்தை மேற்கொண்டனர்.

கொழும்புக்கு வந்த சுவேதன் புகையிரத நிலையத்தில் சோதனையை முடித்துக் கொண்டு வெள்ளவத்தையில் இருக்கும் தன் சித்தப்பா வீட்டிற்கு சென்றான். அவனைக் கண்ட சித்தப்பாவும், சித்தியும் முன்பு போல் சந்தோஷமாக அவனை வரவேற்கவில்லை. மாறாக பயப்பட்டனர். " தம்பி சுவேதன் உன்னிடம் எல்லா அத்தாட்சிப் பத்திரங்களும் இருக்கோ? இங்கு நிற்பது என்றால், பொலிசில் பதிஞ்சுப் போட்டுதான் இருக்க வேண்டும். வீடு வீடாக சென்று சோதனை என்று வந்து சந்தேகத்தின் பேரில் பிடிச்சிக் கொண்டு போனால் மீண்டு வருவது கஷ்டம் முன்பு மாதிரி யாரும் நினைச்ச மாதிரி நினைச்ச இடத்தில் தங்க முடியாது. என்று தன் பயத்தை நாசூக்காக வெளிப்படுத்தினார். சித்தப்பாவின் நியாயமான பயத்தைக் கண்ட சுவேதன் "ஓம் சித்தப்பா எனக்கும் உங்கட நிலைமை புரியுது. நான் இங்கு தங்க வரவில்லை. குளித்து உடை மாற்றிக்கொண்டு உடனே பலாங்கொடைக்குப் போகத்தான் வந்தேன் என்று கூறி குளித்து உடை மாற்றிவிட்டு சித்தி தந்த உணவை அருந்திவிட்டு விடைபெற்று வெளியேறினான்.

பலாங்கொடையில் தன்னுடன் முன்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஒன்றாக பயிற்சி பெற்ற தன் ஆசிரியர் நண்பன் சரவணன் வீட்டிற்கு வந்த சுவேதனை அவர்க்ள வீட்டில் அன்புடன் வரவேற்றனர். அங்கும் சென்றவுடன் பொலிசில் பதிவு செய்து கொண்டதோடு உடனே சுவேதனை வலயக்கல்வி காரியாலத்திற்கு அழைத்துச் சென்று ஆவணங்களை பூர்த்தி செய்து தன் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியர் வெற்றிடத்திற்கு சுவேதனை நியமித்துவிட்டான். வந்தவுடன் தங்குவதற்கு இடமில்லாததால் சரவணன் வீட்டிலே ஒரு அறையில் தங்கினான்.

யாழில் யுத்தம் காரணமாக பல பிரச்சினைகளில் நிம்மதியின்றி பயத்துடன் இருந்த சுவேதனுக்கு இங்கு வந்த பின் நிம்மதி பெருமூச்சுவிட்ட அவள் சந்தோஷமாக பாடசாலையிலேயே சரவணின் தங்கை வர்ஷா, பயிற்சி ஆசிரியராக கடமை புரிந்தாள். எனவே இருவரும் பாடசாலைக்குச் செல்லும் போது ஒன்றாகவே சென்றதோடு ஒரே பள்ளிக்கூடம் என்பதால் இருவருக்கும் பழகி கதைக்க சந்தர்ப்பங்கள் அதிகமாக நாளடைவில் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களை அதிகமாக கலந்து பேசி பழகி பின் ஒருவருக்கொரு பிடித்து போக இருவரும் ரகசியமாக காதல் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக காலம் தன் பாட்டில் சென்று கொண்டிருக்க யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் யுத்த நிலைமை மோசமாக, சுவேதனின் பெற்றோரும் பலாங்கொடைக்கு வந்து வீடு வாடகைக்கு எடுத்து, மகனுடனே தங்க முடிவு செய்தனர். அதன்படி மகன் தனியாக இருப்பதால், அவனுடன் போய் தங்க போறோம் என்ற காரணம் கூறி மிகவும் சிமமப்பட்டு ஒருவாறு பாஸ் பெற்று பல கெடிபிடிகளுக்கு மத்தியில் பலாங்கொடைக்கு வந்து சேர்ந்தனர். அதன் பின் நண்பன் சரவணின் உதவியுடன் வாடகைக்கு வீடு ஒன்று எடுத்து சுவேதன் தன் பெற்றோரையும் கூட்டிக் தங்க வைத்துக் கொண்டான். இனி எப்படியும் தன் காதலைப் பற்றி சீக்கிரம் பெற்றோரிடம் கூறிவிட வேண்டும். என்று சந்தர்ப்பத்தை, எதிர் பார்த்து காத்திருந்தான் சுவேதன். அவன் எதிர் பார்த்தது போலவே, சுவேதனின் தாயும் அவனிடம் திருமண விடயத்தை கதைத்தாள். தான் ஊரிலே தூரத்து உறவுப் பெண்ணொருத்தியை பார்த்திருப்பதாகவும் அப்பாவும் உன்னிடம் இதைப்பற்றி கதைக்கயிருப்பதாகவும், உன்னிடம் கேட்டு உன் விருப்பத்தை தெரிந்த பின்னே தான் அவர்களிடம் கதைத்து ஒரு முடிவு எடுக்கயிருப்பதாகவும் அவனின் தாய் அவனிடம் கூறினான்.

எப்போ சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்த்து காத்திருந்த சுவேதன் அம்மா! நானும் இதுபற்றி உங்களிடம் கதைக்கவேயிருந்தனான் நான் சரவணண் மாஸ்டரின் தங்கை வர்க்ஷாவை மனப்பூர்வமாக விரும்புவதாகவும் அவளும் தன்னை விரும்புவதாகவும் திருமணம் முடித்தால் அவளைத்தான் முடிப்பேன்று மகன் சுவேதன் கூறியதைக் கேட்ட பெற்றோர் அதிர்ந்து போயினர் என்ன தம்பி புதுப்பழக்கம் நாங்கள் பரம்பரையாக யாழ் மண்ணில் பிறந்து வளர்ந்து வாழும் யாழ்ப்பாண தமிழர்கள் அவர்களோ இந்தியாகர வடகத்தி சனங்கள் எங்கட பரம்பரையிலே இப்படி யாரும் மலையகத்தில் திருமணம் முடிக்கவில்லை "எங்கட சாதி சனம் என்ன செல்லுவினம்" எங்களை மதிப்பினமோ, "அவள் பொடிச்சி உன்னை நல்ல மயக்கி போட்டா போல அவைகள் என்ன விடு வளவு சிதனம் தரப் போயினமே" நீயொரு விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் நல்ல சீதனத்தோடு பொம்பள தர அங்க ஊரில காத்திருக்கினம் நீ என்னடா என்னறால் இப்படி வேறு வழியில போற, இதுக்குத்தானா உன்னை கஷ்டப்பட்டு யுத்திற்கு மத்தியில் படிப்பிச்சோம்" என்று வழகத்தில் உள்ள யதார்த்த நிலையைக் கூறி சுவேதனின் பெற்றோர் அவளின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

உடனே சுவேதனும் ஏன் அம்மா, அப்பா இப்படி பேதம் பார்த்து கதைக்கிறியில். யாழ்ப்பாண தமிழ் என்றும் இந்தியகார தமிழர் என்றும் அவர்களும் தமிழர்கள் தானே. நாங்கள் வடகிலும் அவர்கள் மலைகத்திலும் வாழ்கிறார்கள். ஏன் நாம் எல்லோரும் இலங்கை மக்கள் தானே? ஏன் எங்கட ஆட்களும் ஊரிலோ தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறார்கள் தானே? அந்தந்த பிரதேச மண்வளத்திற்கு ஏற்ற மாதிரி பயிர்களை விவசாயம் செய்கிறார்கள். இங்குள்ள பெண்கள் பரம்பரையாகவே வாழ்வாதாரத்திறகாக கொழுந்து பறிப்பதை செய்கிறார்கள் தொழில் செய்வது வாழ்வது ஒன்றும் கேவலம் இல்லையே அதைவிட அங்கு எத்தனையோ கேவலமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதிலிருந்து தப்ப முயன்றவர்கள் ஊனமுற்றவர்களாகவும் ஏன் பிணமாகவும் இங்கு அனுப்பபடுகிறார்கள். சிலர் அங்கு உல்லாசமாக சல்லாப வாழ்க்கை வாழ்ந்துவிட்டு, எயிட்ஸ் பொன்ற நோயிகளை காவிக்கொணடு, பணத்துடன் இங்கு வந்து சமூக சீரழிவை ஏற்படுத்துகின்றனர். ஏன் எங்கட ஆட்களும் கல்வி கற்காமல் வெளிநாடு செல்வோர் அங்கு ஒட்டலில் பீங்கான கழுவியும். பேப்பர் போட்டும், பெற்றொல் நிலையங்களில் தொழில் செய்தும் பணம் அனுப்புகிறார்கள் தானே . இப்படி பார்க்கும் போது மலையகத்தில் வேலை செய்யும் பெண்கள் எவ்வளவோ மேல், ஏன் முன்பு போல் இல்லை இப்போது மலையக சமூகத்தவர்களும், நன்கு படித்து அரசாங்கத்தில் நல்ல பதவிகளில் உள்ளனர். வைத்தியர்கள், இன்ஜினயரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் என்று இருக்கிறார்கள் தானே. அதுவும் வர்க்ஷாவின் தகப்பனும் குமாஸ்தாகவாக இருக்கிறார். அண்ணனும், பாடசாலை அதிபர் அம்மாவும் ஆசிரியர். வர்க்ஷாவும் ஒரு ஆசிரியை, நல்ல குணமானவள் அதுவம் எனக்கு அவளை மிகவும் பிடித்துள்ளது. எனவே, அம்மா நான் திருமணம் முடித்தாள் அவளைத்தான் முடிப்பேன் விருப்பமில்லாத பெண்ணெய் திருமணம் முடித்து எப்படி வாழ்வது? நீங்கள் ஒன்றும் எனக்கு ஊரில் பெண் பார்க்க வேண்டாம் என்று பொறிந்து தள்ளினான் சுவேதன் - தன் பெற்றோரிடம்.

அது மட்டுமல்லாமல் இப்போதைய யுத்த நிலமையில் எங்கட யாழ்ப்பாண சனம் உகிலுள்ள எல்லா நாடுகளிலும் இடம் பெயர்ந்து அகதிகளாகவும் நிரந்தரமாகவும் வசிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சாதி சனம் என்று பார்த்தா அங்கு போகிறார்கள். ஏன் எங்கட அண்ணாவும் கனடா பொம்பலையைத்தானே விரும்பி முடித்தார். அவர் சந்தோசமாகத்தானே வாழ்கிறார். அவர்கள் என்ன சாதி சனமோ? அதுவும் எங்களுக்கு அறிமுகமில்லாத ஒரு அந்நிய மொழி பேசுகிறவர்களோடு ஒன்றாய் சேர்ந்து வாழ முடியுமென்றால் ஒரே நாட்டில், ஒரு மொழி பேசும் வேறு பிரதேசத்தில் வாழும் சனங்களோடு ஏன் சேர்ந்து வாழ முடியாது. நானும் வெளிநாட்டிற்குப் போய் ஒரு வெள்ளக்காரியை முடிந்திருந்தால் என்ன சொல்வீர்கள்?

யாழில் யுத்த நிலமை காரமாக உயிர் உடமைகளை இந்து இங்கு வந்த போது அவர்கள் தானே எங்களை வரவேற்று உபசரித்து எல்லா உதவிகளும் செய்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் உங்களைப் போல் சாதி , சனம் என்று வேற்றுமை காட்டியிருந்தால் நாம் எங்கு போவது? நினைத்வுடன் எல்லோருக்கும் உடனே வெளிநாடு போக முடியுமா? இலட்சக் கணக்கில் பணம் செலவழித்தும் எத்தனையோ பேர் முடியாமல் திரும்பி வருகிறார்கள் - பிடிப்பட்டு சிறையில் வாடுகிறார்கள். எனவே இந்த சாதி சமயம் என்று பழைய விசா கதைகளை விட்டுட்டு உங்கள் இருவருக்கும் சேர்த்துதான் சொல்றன் நான் சந்தோஷமாக வாழ வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் வர்ஷாவின் பெற்றோர், அண்ணனிடம் கதைத்து நல்ல முடிவு எடுத்து எங்கள் இருவருக்கும் திருமணம் முடித்து வையுங்கள். நான் வர்ஷாவை முடிப்பேன் அதில் எந்த மாற்றமும் இல்லை. என்று கூறி எழுந்து போய் விட்டான்.

சுவேதனின் நியாய்மான, உறுதியான பேச்சைக் கேட்விட்டு பெற்றோர்களும் ஒன்றும் பதில் கூற முடியாது விக்கித்து நின்றனர். இவ்வளவு காலமும் தங்கள் அறியாமையினால் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே சுற்றி சுற்றி வந்து விட்டோம் இப்போது இது நவீன உலகம் இன்றைய கால இளைஞர்கள், புதிய சிந்தனைகளுடன் செயல்பட்டு தங்கள் வாழ்க்கையை, சந்தோஷமாக அமைத்துக் கொள்கிறார்கள். அதுவம் வெவ்வேறு இனங்கள் திருமணம் முடிப்பதால், நல்ல அறிவான பிள்ளைகள் பிறப்பார்கள் என்று எங்கோ வாசித்த ஞாபகமும் வரவே தங்களின் மகனின் நியாயமான சந்தோஷமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஒரு நல்ல நாள் பார்த்து வர்ஷாவை பெண் கேட்க அவளின் வீட்டிற்கு செல்ல முடிவு செய்தனர். சுவேதனின் பெற்றோர். உண்மையான காதல் பேதமை கலைந்து கலாபக் காதல் ஆனது.

---

## உணர்ச்சிக்குறி (!) இடவேண்டிய இடங்கள்

உணர்ச்சியை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில்

1) எவ்வளவு பெரிய மலை! (வியப்பு)

2) எதிர்பார்த்துக் காத்திருந்தபடியே அவளுக்குப் பதவி உயர்வு கிடைத்தது! ( மகிழ்ச்சி)

3) மாலாவுடைய கணவன் விமான விபத்தில் இறந்துவிட்டான்! (அதிர்ச்சி)


4. யாருடைய ஆதரவும் இன்றி அவர் எப்படிக் காலந்தள்ளப் போகிறார்! ( இரக்கம்)

5) எதிரே வரும் வண்டி, பஸ்சின் மீது மோதிவிட்டால் என்ன ஆவது! (பயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*M.Thayalan*



# Scholarship

Suthamathi's eyes slowly fluttered open, but instead of feeling refreshed by the soft morning light filtering in through the window, she felt an unexplainable irritation growing within her. As she lay there, she noticed her daughter Tharini lying peacefully beside her, her chest rising and falling with each gentle breath.

Tharini is eleven years old and preparing to take the scholarship exam later this year. Despite feeling love and pride towards her daughter, Suthamathi couldn't shake off the negative feelings that had settled over her.

In London, the Eleven Plus exam is popular among the Tamil community. Children must work very hard to pass this competitive examination. Passing this exam is crucial as it determines whether they can move from year six to year seven and get admission to a grammar school. Grammar schools have many benefits over comprehensive schools, including maintaining good discipline inside and outside the school. The eleven-plus exam selects the most intelligent students for admission to grammar schools.

Suthamathi's daughter, Tharini, will sit this exam in six months, and her parents will put extra pressure on her



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to succeed. Mothers, in particular, feel more pressure than children during this time.

In London, mothers tend to be more competitive with each other than their children. For Tamil parents, seeing their children become doctors is a deeply ingrained dream and tradition. They believe that if their children attend grammar school, their chances of becoming doctors increase significantly. However, this belief is not necessarily true. Suthamathy, like many other Tamil mothers, had this same dream for her daughter Tharini since she was born.

Tharini was sound asleep when Suthamathy let out a deep sigh while looking at her, lost in thought. Her husband noticed her melancholy expression and asked, "Why are you sighing while looking at her?" Suthamathy replied, "Nothing. I'm just thinking about Tharini's future. She needs to pass her exams to become a doctor." Her husband tried to console her, "No, Sutha, she's still a young girl. Putting too much pressure on her is not good."

However, Suthamathy was firm in her beliefs. She retorted, "Do not talk like that. Tharini is a poor girl, and we must put more pressure on her. At such a young age, she must focus on her studies and not waste time on play and enjoyment. I won't even let her watch TV."

She cannot play any computer games. After she comes home from school, Suthamathi will give her a practice paper. Tharini never concentrates on the work provided by her mum. She will do the practice paper because of Mum. In the end, she makes lots of mistakes. Then suthamathi will shout at her.

As Tharini received lower marks on her practice paper, Suthamathi, one of her acquaintances, compared her to Kanaha's daughter, who had scored an impressive 94% on every practice paper. The comparison left Tharini feeling upset and helpless. Suthamathi began shouting all day, making it a difficult and unpleasant experience for everyone around her. The poor girl could not help but cry loudly in response to her unfair treatment. Kanaha, who was also present, witnessed the ordeal and felt sympathetic towards Tharini's distressing situation.

Suthamathi and Kanaha compete with each other, but they never show it face-to-face. Behind the scenes, both of them are like angry animals. Once,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kanaha mentioned that her daughter does four to five papers daily, so she only makes two to three mistakes at most. This news disturbed Suthamathi's mind. Today, Tharini made several mistakes, which made Suthamathi very angry. She threw all the books and said to Tharini, "You can do whatever you want. I am tired, and you will not get food."

Tharini trembled in fear as she sat huddled in the corner, tears streaming down her face. The overwhelming pressure had taken its toll, and she felt helpless. When her father, Ananthan, returned from work, she ran towards him and clung to him tightly, sobbing uncontrollably. Her voice rose above the din of her cries as she sought refuge in her father's embrace. However, Ananthan was not pleased with her behaviour. His face contorted angrily as he reprimanded her, "What is wrong with you? How often do I need to tell you that she is just a little girl and doesn't need to endure this kind of stress? You never listen."

He shouted at Suthamathi. Suthamathi is a lady who never listens to anybody.

"I can't believe you're talking like that. Am I just shouting at her for nothing? She never listens to me anyway. Even if she passes the exam, it won't benefit me in any way."

"If she understands, she'll do it correctly. But how can she study without any tuition? We should consider sending her to tuition classes."

"That Kanaha lady is being so unhelpful. She refuses to tell us where her daughter goes for tuition."

Ananthan is concerned about his wife's attitude towards their daughter's education. He asks his daughter, "Why did you make a mistake, Tharini?"

"I don't understand, dad. Someone needs to explain it to me," Tharini replies.

This response makes Ananthan cry, and seeing him cry, Sutha also begins to cry. Tharini tells her mother, "Mummy, please don't cry. I won't make any more mistakes."

"Sutha, why can't we send Tharini to a tuition class?"

"I know we should, but we must find the right place."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"I've asked Kanaha many times, but she hasn't told us anything. I don't know why."

"Why are you waiting for her? Let's find a place ourselves."

"I think she's sending her daughter to an English tuition centre. I've already contacted them, but they don't have any space. They've put Tharini on the waiting list."

"Sutha, I don't think you're doing the right thing. There's a tuition centre nearby with low fees. I've heard they teach well; many students passed last year."

"OK, let me phone my friend Sunthari."

Sutha phones Sundari, who suggests they send Tharini closer to them to the tuition centre, saying her eldest son studied there and did well.

"What did she say?"

"She said the same thing. Her son also went there and passed."

"No. We will wait two days because they said Tharini would get a place in two days."

"That place is too far from us and is very expensive. My salary is not enough to send her there."

"Are you mad? Do you want to spoil your child's future because of money? Every father in London does two to three jobs for their wife and children. You are saying this. Kanaha's husband is working in three places."

"You have competition with Kanaha. You aim to win Kanaha, not our daughter's future. So do whatever you want; I don't care." He shouted and went to sleep with his daughter.

The next day, in front of the primary school, a mother's meeting was going on as usual. Sundari asked Sutha, "Sutha, have you decided?"

"Not yet. Still, I am thinking."

"Sutha, my son got the highest in this borough studying from there."

"Sundari, they said the syllabus changed now. English people only know correctly."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Sundari tried her maximum. Suthamathi did not accept anything. So Sundari gives up.

"Sundari, Do you know where the Kanaha sent her daughter?"

"You know about Kanaha. She never tells anyone about her matters, and she won't ask others about their matters, either."

"OK, thank you, Sundari. See you later." Suthamathi came home with Tharini. Tharini asked,

"Mum, can you explain these questions to me."

"I also don't know Tharini. You try your best. This week, I will join you at a tuition centre."

Suthamathi phoned the tuition centre. She got good news and was pleased. So Tharini got a place there. Immediately, she phoned her husband about this and asked him to come with 2000 pounds as the first payment." Ananthan could not say anything. He does not know where to get money. Suthamathi was happy because she found a place where Kanaha's daughter goes. Ananthan made so many calls to find the money. Finally, he got the money and came home early from work. That afternoon, both of them went there with Tharini, paid the money, and secured the place. When they returned, they drove in front of the Tamil people's tuition centre.

At that time, Kanaha was coming out of that centre with their daughter. Suthamathi was shocked. Ananthan also saw that scene. He looked at her like a tiny insect. Suthamathi put her head down and worried about losing the battle with Kanaha.


We're on the lookout for captivating short stories in English! Do you have a tale that's been itching to escape the confines of your imagination? We'd love to read it. Share your stories with us and let's explore the wonders of storytelling together.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மகுடம் பதிப்பக வெளியீடுகள் - 2023

69




கவிதை நூல்

70




மரபுக் கவிதைத் தொகுப்பு

71




புதுக் கவிதைத் தொகுப்பு

72




நாவல்

73



சிறுகதைத் தொகுப்பு

74




சிறுகதைத் தொகுப்பு

75





கட்டுரைத் தொகுப்பு

76





சிறுவர் நாவல்

77




பாமாலை

78




கட்டுரைத் தொகுப்பு

79




நாவல்

மகுடம்

பதிப்பக நூல்களை
பெற்றுக் கொள்ள
மகுடம் பதிப்பகம்,
90, பார் வீதி, மட்டக்களப்பு.
தொ.பே. இல.: 077 4338878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LUXMI EDUCATION CENTRE

## 2024/2025
## REGISTER NOW

0208 573 0368
07852 810 285
www.leconline.co.uk



## WHAT WE OFFER

**KS1, KS2, KS3, KS4 AND KS5**

**Maths,English, Science**
**Physics, Chemistry, Biology**
**Mechanics, Statistics**

101A Blyth Road, Hayes, UB31DB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org